# பொன் மொழி வாசகம்

## (மூன்றும் புத்தகம்)

ஆசிரியர்கள் :

**புலவர் பு. செல்வராசனுர்,**
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

**ஆபிரகாம் அருளப்பன்,** B. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :

**சு. சே. உமாபதி,** M. A., L. T., (Dip. in. Geog.)
தலைமையாசிரியர்
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீ வைகுண்டம்

பதிப்புரிமை] *1954* [விலை அணு 8

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

'பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளிப் போதரும் தமிழ் வாசக வரிசையில் இது மூன்றும் புத்தக மாகும். இது 1941–ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன் கண் 500 புதிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. மொழிப் போதனையில் முக்கியமாகக் கருதப்படுவது மொழிப் பயிற்சியேயாகும். இப்பயிற்சிக்குப் போதிய வாய்ப்பளிக் கும் முறையில் இதன்கண் பல்வேறு வகையான ஓவியங் கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றைப் பயன் படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியறிவு ஆக்கமுறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப் பயிற்சிகள் அனைத்தையும் குழந்தைகள் செய்யுமாறு தூண்ட வேண்டுவது ஆசிரியர் கடமையாகும். அன்றியும் வகுப்புக்கு ஏற்றவையாகச் சில இலக்கண பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு இன்பமூட்டத்தக்க இனிய எளிய பாடல்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப் பாட்டுக்களைக் குழந்தைகள் மனப்பாடம் செய்வது நல மாகும். இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ள பாடங்கள் சிறு வர் சிறுமியரின் தமிழறிவையும், பொது அறிவையும் வளரச்செய்யும் என்பது உறுதி. அறிஞர்கள் தமிழ்ச்சிறுவர் சிறுமியர்க்கு இந்நூல் பயனளிக்குமாறு செய்வார்கள் என முற்றிலும் நம்புகிறேன்.

சென்னை
7–11–54.

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் நாடும் தமிழ் மொழியும் | ... | 1 |
| 2. | மயில் | ... | 2 |
| 3. | வாழை | ... | 4 |
| 4. | கலைமகள் விழா | ... | 7 |
| 5. | பருத்தி | ... | 10 |
| 6. | நம் நாட்டுக் கொடி | ... | 14 |
| 7. | சிங்கமும் சுண்டெலியும் (கதைப்படம்) | ... | 15 |
| 8. | மதுரை நகரம் | ... | 16 |
| 9. | சாலை விதிகள் | ... | 19 |
| 10. | யானை | ... | 22 |
| 11. | மௌன வாசிப்பு—I | ... | 25 |
| 12. | தீபாவளி | ... | 26 |
| 13. | தமிழ் மொழி | ... | 29 |
| 14. | கவரி வீசிய காவலன் (நாடகம்) | ... | 31 |
| 15. | பழமொழிகள் | ... | 35 |
| 16. | இந்தியா | ... | 36 |
| 17. | காங்கோ நாட்டுக் குள்ளர் | ... | 40 |
| 18. | கிராம மக்கள் | ... | 43 |
| 19. | மழைப் பாட்டு | ... | 46 |
| 20. | மௌன வாசிப்பு—II | ... | 47 |
| 21. | உழவுத் தொழில் | ... | 50 |
| 22. | சூரியனும் பூமியும் | ... | 53 |
| 23. | மகாத்மா காந்தி | ... | 56 |
| 24. | நாட்டுப் பாட்டு | ... | 60 |
| 25. | நெல்லும் கரும்பும் | ... | 62 |
| 26. | ஔவையார் | ... | 65 |
| 27. | காகமும் குடமும் (கதைப்படம்) | ... | 68 |
| 28. | கடிதம் எழுதுதல் | ... | 69 |
| 29. | மௌன வாசிப்பு—III | ... | 71 |
| 30. | தந்திரத்தால் தாகம் தீர்ந்தது (கதைப்படம்) | | 73 |
| 31. | கடலில் காணும் பொருள்கள் (உரையாடல்) | ... | 74 |
| 32. | செய்யுட் பாடங்கள் | | |
| | 1. ஆத்திசூடி | ... | 78 |
| | 2. கொன்றைவேந்தன் | ... | 78 |
| | 3. வெற்றி வேற்கை | ... | 79 |

# 1. தமிழ் நாடும் தமிழ் மொழியும்

(பாட்டு)

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா !
அமிழ்தில் இனியதடி பாப்பா !—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 1

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே,—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா !
செல்வம் நிறைந்த இந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா ! 2

சாதிகள் இல்லையடி பாப்பா !—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்தமதி, கல்வி,—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர். 3

உயிர்கள் இடத்தில்அன்பு வேணும் ;—தெய்வம்
உண்மை யென்று தான்அறிதல் வேணும் ;
வயிரம் உடையநெஞ்சு வேணும் ;—இது
வாழும் முறைமையடி பாப்பா ! 4

—சி. சுப்பிரமணிய பாரதியார்



# 2. மயில்

1. கடவுள் உலகத்தைப் படைத்தார். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் படைத்தவர் அவரே. அவர் படைத்தவற்றை நாம் நன்ருய்க் கவனித்துப் பார்க்க வேண்டும். இளமைப் பருவம் முதற்கொண்டே எதையும் ஊன்றிப் பார்க்கப் பழக வேண்டும். ஒவ்வொரு பொருளையும் ஊன்றிப் பார்த்தால், பல விஷயங்கள் நமக்குப் புலப்படும்.

2. பறவைகளில் பல வகை உண்டு. அவற்றுள் மயில் ஒன்று. மயில் காட்டுப் பறவை. மயில் மிகவும் அழகான பறவை. அது, தானியங்களையும் பூச்சி, புழுக்களையும் தின்னும். மயிலின் இறகு பார்ப்பதற்கு மிக அழகாய் இருக்கும். அந்த இறகுகளில் நீலம், மஞ்சள், பச்சை என்னும் நிறங்களைக் காணலாம்.

3. மயிலின் உடல் பெரியது; தலை சிறியது. மயிலுக்குக் கழுத்து நீண்டிருக்கும். அதன் கால்களும் நீளமானவை. அதன் இறக்கைகள் சிறியவை. ஆதலால் மயில் வானத்தில் பறப்பதில்லை. மயில் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆண் மயிலுக்குத் தலையின் உச்சியில் கொண்டை உண்டு. பெண் மயிலுக்குச்

கொண்டை இராது. ஆண் மயிலின் வால் இறகு நீளமாக இருக்கும். அதற்குத் தோகை என்பது பெயர். மேகத்தைக் கண்டால் மயிலுக்கு மகிழ்ச்சி உண்டாகும். அப்போது அது தோகையை விரித்து ஆடும்.

4. விரிந்த தோகை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். தோகை இறகின் முனையில் அழகான வட்டம் காணப்படும். அதனைக் கண் என்று கூறுவார்கள். மயிலின் தோகையால் விசிறி செய்யலாம். மயில் இறகு மருந்துக்கும் பயன்படுகிறது. மயிலைக் கோவில்களிலும், வீடுகளிலும் வளர்ப்பார்கள். மயில் அழகிய பறவையாக இருந்தாலும், அதன் குரல் இனிமையாக இராது. மயில் கத்துவது அகவுதல் எனப்படும்.

### அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| படைத்தார் | பருவம் | இறகு | தோகை |
| இளமை | ஊன்றிப்பார் | உச்சி | மகிழ்ச்சி |

### பயிற்சி

1. விடை எழுது :

அ. மயில் எங்கு வசிக்கும் ?
ஆ. ஆண் மயிலுக்கும் பெண் மயிலுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை ?
இ. மயிலின் உடலில் காணப்படும் நிறங்கள் எவை ?
ஈ. மயில் எப்போது ஆடும் ?

2. எதிர்பதங்கள் எழுது :

இளமை ×
பலவகை ×
நீண்ட ×

3. பொருந்தி எழுது :

| | |
|---|---|
| கடவுள் | புழு பூச்சிகளைத் தின்னும். |
| பறவைகளில் | தோகை விரித்து ஆடும். |
| மயில் | உலகத்தைப் படைத்தார். |
| ஆண்மயில் | பல வகை உண்டு. |



# 3. வாழை

1. வாழை மரத்தை நீ பார்த்திருக்கிருயா? வாழை மரம் உஷ்ண தேசங்களில் செழித்து வளரும். நமது நாட்டுக் கிராமங்களில் வாழைத் தோட்டங்களேக் காணலாம். வண்டல் படிந்த நிலத்திலும், மண் கலந்த களிப்பு நிலத்திலும் வாழை நன்ருகப் பயிராகும். அதற்கு நிரம்பத் தண்ணீர் வேண்டும்.

2. வாழையில் பல வகை உண்டு. பூவன், பங்காளா, மொந்தன், பேயன், மலேவாழை என்பன அவற்றுள் சிலவாம். வாழைக்குக் கிளே இல்லே; மட்டைகளே உண்டு. வாழையின் அடிப்பாகம் பட்டைகளால் மூடப்பட்டு இருக்கும். பட்டைகளே உரித்தால் உள்ளே தண்டு இருக்கும். வாழை இலே அகலமாகவும், நீளமாகவும் இருக்கும்.

3. வாழைக்கு விதை இல்லே. ஆனல், அதன் கிழங்கில் இருந்து கன்றுகள் தோன்றும். அக்கன்றுகளேப் பெயர்த்து எடுத்துப் பள்ளம் தோண்டிப் புதைப்பர். பிறகு அவற்றின் மேல் பாகத்தை வெட்டிவிடுவர். சில நாட்கள் கழித்துக் குருத்து வரும். அது இலேயாக

விரியும். இலைகள் பல தோன்றும். கடைசியில் ஒரு சிறிய இலை தோன்றும். அதற்குக் 'கண்ணாடி இலை' என்பது பெயர். அதன் பின் பூ தோன்றும். பூ விரிந்தால், ஒவ்வோர் இதழின் அடியிலும் சீப்புச் சீப்பாய்ப் பிஞ்சுகள் இருக்கும்; பிஞ்சு முற்றிக் காயாகும். காய் முற்றிப் பழமாகும். வாழை மரம் ஒரே ஒரு குலைதான் விடும். குலைக்குத் தாறு என்பது வேறு பெயர். குலைகளிலுள்ள காய் முற்றிப் பழுத்ததும் வாழை அழிந்துவிடும்.

4. வாழையின் எல்லாப் பாகங்களும் நமக்குப் பயன்படுகின்றன. வாழைப்பட்டையை இணைத்தால் உண்கலமாக உதவும். வாழை நார் பூ தொடுக்க உத-வும். தண்டு, காய், பூ ஆகியவற்றைச் சமைத்துச் சாப்-பிடவும், இலையை உண்கலமாகவும் உபயோகிக்கிறோம். பழத்தைச் சாப்பிடுகிறோம். கலியாண காலங்களில் வாழையைக் கலியாணப்பந்தலில் கட்டுகிறோம். வாழை எக்காலத்திலும் பயிராகும். ஆகையால் வாழை இலை, தண்டு, காய், பூ, பழம் என்பன எப்போதும் கிடைக்கும். மா, பலா, வாழை முக்கனிகள் எனப்படும்.

### அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| *உஷ்ண தேசம்* | *செழித்து* | *நிரம்ப* | *பட்டை* |
| *விதை* | *இதழ்* | *சீப்பு* | *தாறு* |
| *அழிந்து* | *பயன்* | *பூ தொடுக்க* | *உண்கலம்* |

### பயிற்சி

1. *விடை எழுது :*
   - அ. *வாழை எங்குப் பயிராகும் ?*
   - ஆ. *வாழை மரத்துக்கும் மற்ற மரங்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?*
   - இ. *விதை இல்லாமையால், வாழை எப்படி விருத்தி செய்யப்படுகிறது?*
   - ஈ. *வாழையின் உபயோகங்கள் யாவை?*

**2. எதிர்ப் பதங்கள் எழுது :**

பார்த்திருக்கிறேன் ✕
நிரம்ப ✕
இல்லை ✕
விரியும் ✕
கடைசி ✕

**3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:**

செழித்து–கிராமங்கள்–வண்டல்மண்–களிமண்–குருத்து–பட்டை–முற்றி–அழியும்.,

**இலக்கணம் :** பெயர்ச் சோல்

ஒரு பொருள் இருந்தால், அதற்கு ஒரு பெயர் இருக்க வேண்டும். அப்பெயரை இலக்கணத்தில் பெயர்ச் சோல் என்கிறோம்.

ஒரு பொருளின் பெயரே பெயர்ச் சொல்.

இவற்றைப்படி:

| ஒன்று | பல |
|---|---|
| பழம் | பழங்கள் |
| வீடு | வீடுகள் |
| வண்டி | வண்டிகள் |
| பலகை | பலகைகள் |
| நாய் | நாய்கள் |
| பறவை | பறவைகள் |

ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லின் எண் ஒருமை எண். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் சொல்லின் எண் பன்மை எண். இது இலக்கண வழக்கம்.

ஒரு பொருளைக் குறிப்பது, இரண்டு முதலாகப் பல பொருள்களைக் குறிப்பது என்று எண் இருவகைப்படும்.



# 4. கலைமகள் விழா

1. நம் இந்திய நாட்டில் இந்துக்கள் கல்வியையும் செல்வத்தையும் தெய்வமாகப் போற்றி வணங்குகிறார்கள். கல்விக்குத் தெய்வம் **கலைமகள்** என்பர். செல்வத்திற்குத் தெய்வம் **திருமகள்** என்பர். கலைமகளை **நாமகள்** என்றும், **சரசுவதி** என்றும் கூறுவது உண்டு. திருமகளை **இலக்குமி** என்று அழைப்பர்.

2. இந்துக்கள் கலைமகளைத் தினந்தோறும் வழிபடுகிறார்கள். மேலும், வருடந்தோறும் விழாக் கொண்டாடியும் வழிபடுகின்றார்கள். கலைமகள் விழா புரட்டாசி மாதத்தில் வரும். அன்று கலைமகள் படத்திற்கோ, உருவச் சிலைக்கோ பூமாலைகள் சூட்டி, அலங்காரம் செய்வார்கள். புத்தகங்களை எல்லாம் எடுத்து அழகாக அடுக்கிப் படத்தின் முன் வைப்பார்கள். அவைகளுக்குப் பூமாலை சூட்டிச் சந்தனம் தெளித்துக் குங்குமம் இடுவார்கள். புத்தகங்களுடன் கலைமகள் படமோ, உருவமோ வைத்திருக்கும் இடத்தில் மாவிலைத் தோரணங்கள் கட்டியும், வாழைக் கன்றுகள் நாட்டியும் அலங்கரிப்பார்கள்.

3. அங்குக் கலைமகள் எதிரில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, அவல் கடலை முதலியன வைத்துப் படைப்பார்கள். சிலர் வடை, சுண்டல், பாயசம் முதலியனவும் வைப்பர். பள்ளியிற் படிக்கும் சிறுவர், சிறுமியர் தாங்கள் கல்வியில் சிறப்பு அடைய வேண்டும் என்று கலைமகளை வேண்டி வணங்குவார்கள். இவ்விழாவைச் சரசுவதி பூஜை என்பது வழக்கம்.

4. தொழிலாளர்கள் தங்கள் கருவிகளைக் கழுவி, துடைத்து, எண்ணெய் தடவி வரிசையாக வைப்பார்கள். அவற்றைப் பூமாலைகளால் அலங்கரிப்பார்கள்; தூபம் தீபம் காட்டி வழிபடுவார்கள். இவ்வழிபாட்டை ஆயுத பூஜை என்பது வழக்கம். இதனால் கைத்தொழிலும் ஒருவகைக் கல்வியே என்பதை நாம் அறிகிறோம் அல்லவா ?

5. கலைமகளை வழிபட்டுச் சிறப்பு அடையாதவர் இலர். முற்காலத் தமிழ்ப்புலவர் அனைவரும் கலைமகளை வழிபட்டவரே. கல்வியில் பெரியவரான கம்பர் கலைமகளைச் ' சரசுவதி அந்தாதி ' என்னும் நூல் இயற்றி வழிபட்டார். ஒட்டக்கூத்தர் என்பவர் கலைமகளுக்குக் கோவில் கட்டி வணங்கி வந்தார். குமரகுருபரர் என்பவர் 'சகல கலாவல்லி மாலை' என்னும் நூலைப் பாடிக் கலைமகளைத் துதித்தார்.

### அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| *கல்வி* | *சரசுவதி* | *உருவச்சிலை* | *படைப்பார்கள்* |
| *செல்வம்* | *திருமகள்* | *மாலைசூட்டி* | *வணங்குவர்* |
| *கலைமகள்* | *இலக்குமி* | *தோரணங்கள்* | *துதித்தார்* |
| *நாமகள்* | *வழிபடு* | *அலங்கரிப்பர்* | *இயற்றி* |

### பயிற்சி

*1. விடை எழுது :*

*அ. கல்விக்குத் தெய்வம் யார் ?*

*ஆ. செல்வத்துக்குத் தெய்வம் யார் ?*

இ. கலைமகள் விழா எந்த மாதத்தில் கொண்டாடப் படுகிறது?

ஈ. அவ்விழா எப்படிக் கொண்டாடப்படுகிறது?

உ. கம்பர் யார்? அவர் இயற்றிய நூல் யாது?

ஊ. சகலகலாவல்லி மாலையை இயற்றியவர் யார்?

2. எதிர்ப் பதங்கள் எழுது :

வரும் ×
செய்வார் ×
சிறப்பு ×
சுத்தம் ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

கூறுவர்–அழைப்பர்–அலங்காரம்–சிறப்பு–வணங்கு – வழி படு–புலவர்–இயற்றினர்–நூல்.

## வினைச்சொல்

வினை என்றால் வேலை அல்லது தொழில். ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

இவற்றைப்படி:

1, மாடு புல் மேய்கிறது.
2. கந்தன் படிக்கிறான்.
3. காக்கை பறக்கிறது.

மாடு என்ன செய்கிறது? மேய்கிறது. மேய்வது மாடு செய்யும் தொழில். கந்தன் என்ன செய்கிறான்? படிக்கிறான். படித்தல் கந்தன் செய்யும் தொழில். காக்கை என்ன செய் கிறது? பறக்கிறது. பறத்தல் காக்கையின் தொழில். இவ்வாறு ஒரு பொருளின் தொழிலைத் தெரிவிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும்.



# 5. பருத்தி

1. மக்களுக்கு உணவு, உடை, உறையுள் மூன்றும் மிகவும் அவசியமானவை. உறையுள் என்பது வசிக்கும் வீடு. உணவு, பயிர்த் தொழிலால்கிடைக்கின்றது. உடையை நாம் எவ்வாறு பெறுகிறோம் ? உலகில் பல வகை ஆடைகள் நெய்யப்படுகின்றன. அவற்றுள் கம்பள ஆடை, பட்டு ஆடை, பருத்தி ஆடை என்பன முக்கியமானவை. கம்பள ஆடை குளிர் மிகுந்த நாடுகளுக்கு ஏற்றவை. பட்டு ஆடை மிகுந்த விலை உடையது. ஆதலால், ஏழை முதல் பணக்காரர் வரையில் எல்லாரும் உபயோகிக்கக் கூடியது பருத்தி ஆடையே ஆகும்.

2. பருத்தி என்பது பருத்திச் செடியிலிருந்து கிடைக்கிறது. பருத்திச் செடி வெப்ப மண்டலத்திலும், மித வெப்ப மண்டலத்திலும் பயிராகும். அது

கரிசல் மண் நிலத்தில் நன்ருகப் பயிராகும். பருத்திக்கு நீர் அதிகம் தேவையில்லை. பருத்திக்குப் பகை பனி. பனி பெய்தால் பருத்திக் காய்கள் உதிர்ந்துவிடும்.

3. பருத்திச்செடி ஏறக்குறைய ஆறு மாத காலத்தில் பயன் தரும். கோடையில் பயிர்செய்த பருத்திச் செடி நெட்டையாகவும், குளிர் காலத்தில் பயிர் செய்த பருத்திச் செடி குட்டையாகவும் இருக்கும். பருத்தி பறிக்கும் காலத்தில் சூரிய ஒளி அதிகம் வேண்டும்.

4. பருத்திச்செடி, மூன்று அல்லது நான்கு அடி உயரம் வளரும். இச்செடிக்கு ஆணிவேர் உண்டு. அந்த ஆணிவேர் பூமியின் அடியில் அதிக ஆழம் செல்லும். அதனால் மழை சொற்பமாக இருந்தாலும் பருத்தி பலன் தரும். பருத்தி இலை ஐந்து பிரிவுகளையும், நரம்புகளையும் உடையதாகக் காணப்படும்.



காய் முற்றி வெடிக்கும்போது, அதில் மூன்று அறைகள் காணப்படும். அந்த அறைகளில் வெண்மையான பருத்தியும், கரிய விதைகளும் இருக்கும். பருத்திக் கொட்டை மாடுகளுக்கு உணவாகும். பருத்தி விதையிலிருந்து ஒருவித நெய்யும் எடுக்கிருர்கள்.

5. நம் நாட்டில் ஏராளமாகப் பருத்தி பயிராகிறது. தமிழ் நாட்டில் கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் பருத்தி அதிகம் பயிர் செய்யப்படுகிறது. பருத்தியைப் பயிர் செய்வதனுல் பலர் பிழைக்கலாம். பருத்தியைச் சேகரிப்பது, அதில் உள்ள கொட்டைகளை நீக்குவது, பருத்தியை அடித்துத் தூசி

துரும்புகளைப் போக்குவது, நூல் நூற்பது, ஆடை நெய்வது என்பன பருத்தி சம்பந்தமான தொழில்கள் ஆகும். பருத்தி மென்மையானது. கொட்டை நீக்கப்பட்ட பருத்திக்குப் பஞ்சு என்பது பெயர்.

6. நம் நாட்டில் மிகப் பழமையான காலத்திலிருந்து பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. பருத்தி ஆடைக்கு உடம்பிலுள்ள வியர்வையை இழுத்துக் கொள்ளும் இயல்பு உண்டு.





7. நூல் நூற்றல் மிக்க பயன் தரும் தொழில் என்று காந்தியடிகள் கூறியுள்ளார். அது மிகவும் மேன்மையான தொழில் என்றும் அவர் கூறியுள்ளார். இந்திய நாட்டு மக்கள் யாவரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேற்றுமை இல்லாமல் நூல் நூற்கவேண்டும். இதுவே காந்தியடிகளின் கருத்து. இராட்டையாலும் தக்ளியாலும் நூல் நூற்கலாம். அப்படி நூற்ற நூலால் நெய்யப்படும் ஆடை, **கதர் ஆடை** எனப்படும். இக்காலத்தில் நூல் நூற்பதற்கும், ஆடைகள் நெய்வதற்கும் இயந்திரங்கள் தோன்றி உள்ளன.



ஆனால், நெடுங்காலமாக நம் இந்திய நாட்டு மக்கள் கைத்தறியில் ஆடை

நெய்து வந்தார்கள். அது அயல் நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தது.

8. திருக்குறள் என்ற அருமையான தமிழ் நூலை இயற்றியவர் திருவள்ளுவர். அவர் நெசவுத் தொழிலைச் செய்து வந்தார் என்பதை நாம் அறிகிறோம்.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| உறையுள் | வெப்பமண்டலம் | பகை |
| ஆசை | மிதவெப்ப மண்டலம் | நெட்டை |
| ஏற்றவை | கரிசல் மண் | குட்டை |

### பயிற்சி

1. விடை எழுது:

   அ. தமிழ் நாட்டில் பருத்தி எங்கெங்குப் பயிராகிறது?

   ஆ. பருத்திக்கு ஏற்ற நிலம் எது?

   இ. பருத்தி சம்பந்தமான தொழில்கள் எவை?

   ஈ. பருத்திக் கொட்டையின் உபயோகங்கள் எவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

   அரியமானவை ×
   மிகுந்த ×
   வெப்பம் ×
   தரும் ×
   உண்டு ×
   நெட்டை ×

3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதவும்:

   உடை-ஆடை-உண்டி-நெசவுத்தொழில்-நூல் நூற்றல் -பனி-பகை-அயல் நாடு.



## 6. நம் நாட்டுக் கொடி

கொடி பறக்குது! கொடி பறக்குது!
கொடி பறக்குது பாரடா!
கோணல் அற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா!

மனம் உவந்து உயிர் கொடுத்த
மான முள்ள வீரர்கள்
மட்டில் லாத துன்ப முற்று
நட்டு வைத்த கொடியிது!

தனம் இழந்து, கனம் இழந்து,
தாழ்ந்து போக நேரினும்
தாயின் மானம் ஆன இந்தக்
கொடியை என்றும் தாங்குவோம்.

—நாமக்கல் கவிஞர்




# 7. சிங்கமும் சுண்டெலியும்

## கதைப் படம்

**படத்தைப் பார்த்துக் குறிப்புக்களின் உதவியால் கதையைச் சொல்லு :**

**குறிப்புக்கள்:**

படம் 1. சிங்கம் தூங்குகிறது. சுண்டெலி அதன்மீது விளையாடுகிறது.

படம் 2. சிங்கம் விழிக்கிறது; கோபத்தால் சுண்டெலியைக் கொல்லப் பார்க்கிறது. சுண்டெலி மன்னிக்க வேண்டுகிறது.

படம் 3. சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொள்கிறது. சிங்கம் கத்துகிறது.

படம் 4. சத்தம் கேட்ட சுண்டெலி வருகிறது. வலையைக் கடித்துச் சிங்கத்தை விடுவிக்கிறது.



# 8. மதுரை நகரம்

1. தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ்நாடு. இதனைத் தமிழகம் என்றும் கூறுவர். தமிழ்நாடு முற் காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்ற மூன்று பிரிவுகள் உடையதாக இருந்தது. அவற்றை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்பவர் ஆண்டு வந்தனர். சேர நாட்டுத் தலைநகர் வஞ்சிமாநகர்; சோழ நாட்டுத் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம்; பாண்டி நாட்டுத் தலைநகர் மதுரைமாநகர்.

2. பாண்டிநாடு 'செந்தமிழ் நாடு' என்ற சிறப்பான பெயரையும் பெறும். பாண்டிய மன்னர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தினர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர்; தமிழில் சிறந்த நூல்களை இயற்றுவித்தனர். மதுரையில் சங்கத்தார் கோவில் என்னும் பெயருடன் ஒரு கோவில் இருப்பதை இன்றும் காணலாம்.

3. மதுரை ஒரு பெரிய நகரம். அது வியாபாரத்திற்குப் பெயர்பெற்றது. மதுரையில் சில பஞ்சாலைகள் உள்ளன. அங்குக் கைத்தறி நெசவும், சாயத்தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. அதனால் அங்கு மக்கள் தொகை அதிகம். அன்றியும், மதுரை ஒரு புண்ணிய ஸ்தலமாகும்.

4. மதுரை நகரின் நடுவில் **மீனாட்சி அம்மன் கோவில்** இருக்கிறது. அது மிகப் பெரிய கோவில். அதில் அநேக அழகிய கருங்கற் சிலைகள் உண்டு. அங்குள்ள சிவபெருமான் பெயர் **சோமசுந்தரக் கடவுள்**. அவருக்குச் சொக்கநாதர் என்ற பெயரும் உண்டு. மீனாட்சி அம்மன் கோவிலில் பன்னிரண்டு மாதங்களிலும் திருவிழா நடைபெறும். ஆதலால் எல்லா நாட்களிலும் ஜனங்கள் திரள் திரளாய் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருப்பார்கள். அந்தக் கோவிலுக்குள் ஓர் அழகிய குளம் இருக்கிறது. அதற்குப் பொற்றாமரைக் குளம் என்பது பெயர்.

5. மதுரை நகரம் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. மதுரை நகரின் வீதிகள் கோவிலைச் சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளன. இவ்வூரில் இப்பொழுதும் ஒரு தமிழ்ச் சங்கம் இருக்கிறது. மதுரைக்கு மேற்கே நான்கு மைல் தொலைவில் திருப்பரங்குன்றம் என்னும் ஸ்தலம் இருக்கிறது.

6. திருமலை நாயக்கர் மஹாலும், மாரியம்மன் தெப்பக் குளமும் மதுரையில் பார்க்கத் தகுந்த இடங்களாகும். தமிழ்நாட்டின் மிகப் பழைய நகரங்களுள் மதுரை நகரமும் ஒன்றாகும். இக்காலத்திலும் அது பெருமையோடு விளங்குகிறது.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| தமிழகம் | மன்னர் | அமைந்துள்ளது |
| முறையே | சங்கம் | புண்ணியஸ்தலம் |
| மாநகர் | சிலைகள் | தெப்பக்குளம் |
| மஹால் | தொகை | இயற்றுவித்தனர் |

## பயிற்சி

1. விடை எழுது:

அ. தமிழ்நாடு என்று எதற்குப் பெயர்?

ஆ. பழங்காலத்தில் தமிழ்நாடு எத்தனை பகுதிகளாக விளங்கியது? அப்பகுதிகளின் பெயர்கள் யாவை?

இ. மதுரை இக்காலத்தில் பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கக் காரணம் யாது?

ஈ. மதுரையில் உள்ள பெரிய கோவில் எது?

உ. மதுரையில் காணத்தக்க சிறந்த இடங்கள் எவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

முற்காலம் ×
பெரிய ×
உள்ளன ×
உள்ளே ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

கூறுவர்–ஆண்டனர்–நகரம்–நடுவில் – அழகிய–வீதிகள்–தொல்லை–பெருமை.




## 9. சாலை விதிகள்

1. நாம் சாலையில் செல்லும்பொழுது சில விதிகளைக் கவனிக்க வேண்டும். தெருவில் பல வகை வண்டிகள் வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கும் அல்லவா? சென்னை போன்ற பெரிய நகரங்களின் தெருக்களில் வண்டிகள் அதிகம். நாம் அவைகளையெல்லாம் கவனித்துச் செல்லாவிட்டால் நம் உயிருக்கே ஆபத்து உண்டாகும்.

2. சாலைகளில் செல்லும்போது நாம் நண்பர்களோடு பேசிக்கொண்டும், வேடிக்கை பார்த்துக் கொண்டும் செல்லலாகாது. சென்றால் நமக்கு முன் புறத்திலும் பின்புறத்திலும் வரும் வண்டிகளைக் கவனிக்க முடியாது. ஆகையால் நாம் வண்டியில் அகப்பட்டுக்கொள்ள நேரிடும்.

3. நடக்கும்பொழுது சாலையின் நடுவே நடப்பதை நீக்க வேண்டும். சாலை ஓரங்களில் அமைத்துள்ள நடைபாதைகளின் மீது நடந்து செல்ல வேண்-

டும். நடைபாதைகள் இல்லாவிடில் எப்பொழுதும் சாலையின் ஓரத்தில் இடப்பக்கமாகவே செல்லவேண்டும். நடைபாதையை விட்டுக் கீழே இறங்கிச் செல்வதால் விபத்துக்கள் உண்டாகின்றன.

4. சாலை ஓரமாகச் செல்லும் பொழுது கல் கண்ணுடித் துண்டு, ஆணி முதலியன கிடக்கும். ஆதலால், நாம் நடக்கும்பொழுது வழியைப்பார்த்து நடந்து செல்ல வேண்டும். அவை நம் கண்ணில் பட்டால் அவற்றை அப்புறப்படுத்த வேண்டும். வாழைப் பழத்தைத் தின்றுவிட்டு அதன் தோலை வழியில் எறிந்து விடுகிறுர்கள். அவ்வாறு செய்வது பெருந்தவறு. ஏனெனில் நடந்து செல்பவர்கள் அதன்மீது காலை வைக்க நேர்ந்தால் அது வழுக்கிவிடும். அதனுல் அவர்கள் கீழே விழுந்து துன்பம் அடைவார்கள்.

5. சாலையில் பலர் சேர்ந்து செல்லும்பொழுது ஒருவர் பக்கத்தில் ஒருவராகச் சுவர் வைத்தது போலச் சாலையை அடைத்துக்கொண்டு செல்லலாகாது. நாம் அவ்வாறு செல்வதால், பிறர் செல்வதற்குத் தடை செய்பவர் ஆவோம். ஒருவர் பின் ஒருவராய்ப் பிறர் செல்வதற்கு இடம் விட்டுச்செல்லுதல் வேண்டும்.

6. சாலையைக் கடக்கும்போது பாதி தூரம் வரை வலப்புறம் பார்த்துச் செல்ல வேண்டும். சாலையின் மத்தியை அடைந்த பின் இடப்புறம் பார்த்துச் செல்ல வேண்டும். இந்த விதிகளை நாம் கவனித்து நடந்து கொண்டால் விபத்துக்கள் நேரா.

7. சாலைகளில் வண்டி ஓட்டுபவர் கவனிக்க வேண்டிய விதிகள் சில உண்டு. எப்போதும் சாலையின் இடப் பக்கமாகவே வண்டியைச் செலுத்த வேண்டும். சாலைகள் கூடும் இடத்தில் போலீஸ்காரர் நிற்பார்

அவர் கைகளைக் காட்டி வண்டிகளை ஒழுங்காகச் செலுத்துவார். வண்டி ஓட்டுபவர் அவர் கைகளைக் கவனித்து வண்டியைச் செலுத்தினால் விபத்துக்கள் நேரா.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| சாலைவிதி | நடைபாதை | பிறர் |
| நகரம் | தவறு | கடத்தல் |
| ஆபத்து | வழக்கும் | விபத்துக்கள் |

## பயிற்சி

1. விடை எழுது :
   அ. நாம் சாலையின் எந்தப் பகுதியில் நடந்து போக வேண்டும்?
   ஆ. சாலையைக் கடக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?
   இ. சாலைகளில் நாம் செய்யத் தகாத காரியங்கள் எவை?
2. எதிர்ப் பதங்கள் எழுது :
   வேண்டும் ×
   இருக்கும் ×
   ஆகாது ×
   கீழே ×
3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:
   சாலை–விதிகள்–கவனிக்க வேண்டும்–ஆபத்து–நடுவே–ஓரம்.



# 10. யானை

1. விலங்குகளுள் மிகப் பெரியது யானை. அது காட்டு மிருகம். ஆயினும், அதனைப் பிடித்துப் பழக்கினால், அது மக்களுக்குப் பல வகையில் பயன்படுகின்றது. யானை, மாமிசம் தின்பதில்லை; இலை, தழை, புல், அரிசி, தேங்காய், பழம், கரும்பு முதலியவற்றைத் தின்னும். யானைக்குக் கரும்பில் விருப்பம் அதிகம். யானை, மலைப்பக்கங்களில் கூட்டம் கூட்டமாய்த் திரியும்.

2. யானை கருமை நிறம் உடையது. யானைக்குத் தும்பிக்கை என்னும் ஓர் உறுப்பு உண்டு. வேறு எந்த மிருகத்திற்கும் அந்த உறுப்பு இல்லை. யானையின் கால்கள் உரல் போல இருக்கும். அதன் காதுகள் முறம் போல அகன்று இருக்கும். யானையின் நெற்றியை மத்தகம் என்பர். அது மிகவும் உறுதியானது. யானையின் வால் குட்டையாகவும், நுனியில் சில தடித்த மயிர்களுடனும் காணப்படும். யானையின் தோல் தடித்ததாய்ச் சொரசொரப்பாய் இருக்கும்.

3. பெரிய வடிவத்தை உடைய யானைக்கு மிகச் சிறிய கண்களே உண்டு. ஆனால் அவை கூர்மையான பார்வை யுடையவை. தும்பிக்கையைத் துதிக்கை என்றும் கூறுவர். யானையின் தும்பிக்கை நீண்டு நுனியில்

ஒரு விரல் போன்ற உறுப்பைப் பெற்று இருக்கும். அதன் நுனியில் இரண்டு துவாரங்கள் உண்டு. அவையே அதன் மூக்குத் துவாரங்கள். தும்பிக்கை, யானைக்கு மூக்காகவும், கையாகவும் பயன்படுகிறது. யானை தனது தும்பிக்கையால் பூமியின்மேல் கிடக்கும் சிறிய ஊசியையும் எடுத்துவிடும். யானை தும்பிக்கை-யின் துவாரத்தினுல் நீரை உறிஞ்சிக் குடிக்கும்: அத் தும்பிக்கையால் மரக் கிளைகளை ஒடித்துத் தழையைத் தின்னும். யானையின் பாதம் அகலமாக இருக்கும்.

4. யானையின் முகத்தில் இரண்டு கொம்புகள் உண்டு. அவற்றைத் தந்தம் என்பர். தந்தத்தை உடை-யது ஆதலால், யானைக்குத் **தந்தி** என்னும் பெயரும் உண்டு. ஆண் யானையைக் **களிறு** என்றும், பெண் யானையைப் **பிடி** என்றும் கூறுவர். இளம் யானையைக் 'கன்று' என்று கூறவேண்டும். 'யானைக் குட்டி' என்று கூறுவதும் உண்டு. யானை, கட்டுத்தறியில் எப்பொழு-தும் அசைந்துகொண்டிருக்கும். காடுகளில் ஆழமான குழிகள் வெட்டி அவற்றைக் கிளைகளாலும், தழை-களாலும் மூடிவைப்பார்கள். யானைகள் குழி இருப்-பதை அறியாமல் அதில் விழுந்துவிடும். பிறகு பழகிய யானைகளைக் கொண்டு அவற்றைக் கரையில் ஏற்றிக் கொண்டு வந்து பழக்குவார்கள்.

5 யானை பத்து அல்லது பன்னிரண்டடி உயரம் இருக்கும். பருமனுன தலையைத் தாங்கும் யானையின் கழுத்து குட்டையானது. யானை கம்பீரமான மிருகம், முற்காலத்தில் அரசர்கள் யானைப்படை வைத்திருந்-தார்கள். யானையை அலங்கரித்து, அதன் முதுகில் அம்பாரி வைத்து, அதில் அரசர்கள் அமர்ந்து செல்-வார்கள். நமது நாட்டில் பெரிய கோவில்களில் யானை இருப்பதைப் பார்க்கலாம்.

6. யானையின் தந்தம் விலை உயர்ந்தது. அதனைக் கொண்டு அழகிய பல பொருள்கள் செய்வார்கள். ஆதலால், 'யானை இருந்தாலும், இறந்தாலும் ஆயிரம் பொன்,' என்னும் பழமொழி வழங்குகிறது.

7. மலைகளிலிருந்து பெரிய மரங்களை இழுத்து வரவும், அவற்றை அடுக்கவும் யானையை உபயோகிக்கிறார்கள். யானை மிகவும் அறிவுள்ள மிருகம். அது தனக்குச் செய்யும் நன்மை, தீமைகளை அறிந்து, சமயம் வாய்க்கும்போது திருப்பிச் செய்யும் குணம் உடையது. யானையை மேய்ப்பவன் யானைப்பாகன் என்று கூறப்படுவான். அவனை **மாவுத்தன்** என்றும் கூறுவர். அவன் யானையை அடக்குவதற்கு வைத்திருக்கும் ஆயுதம் அங்குசம் எனப்படும்.

### அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| *மாமிசம்* | *கருமை* | *உறுப்பு* | *மத்தகம்* |
| *தந்தி* | *துதிக்கை* | *நுனி* | *சொரசொரப்பு* |
| *களிறு* | *பிடி* | *கட்டுத்தறி* | *பருமன்* |
| *யானைப்படை* | *அம்பாரி* | *மாவுத்தன்* | *அங்குசம்* |

### பயிற்சி

1. *விடை எழுது:*

   அ. *யானையை நீ பார்த்திருக்கிறாயா? எங்கே பார்த்தாய்?*
   ஆ. *மற்ற மிருகங்களுக்கு இல்லாமல் யானைக்கு மட்டும் இருக்கும் உறுப்பு எது? அதனால் யானைக்கு என்ன பயன்?*
   இ. *யானையை எவ்வாறு பிடிக்கிறார்கள்?*
   ஈ. *யானையின் உபயோகங்கள் எவை?*

2. *எதிர்ப் பதங்கள் எழுது:*

   *பயன்படும்* ×
   *அகன்றது* ×
   *கூர்மையான* ×
   *களிறு* ×

8. *கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:*

   *விலங்கு-கூட்டம் கூட்டமாய்-வடிவம்-துவாரம்-நன்மை-தீமை-யானைப்பாகன்.*

# 11. மௌன வாசிப்பு—I

**கீழே உள்ள கதையை மனத்துக்குள் படித்து வினாக்களுக்கு விடை எழுது :**

1. ஒரு வேடன் வில்லும் அம்பும் கொண்டு காட்டில் திரிந்தான். நெடு நேரம் சுற்றியும் பறவை ஒன்றும் அகப்படவில்லை. அவன் களைத்துப் போனான். அவன் ஒரு மரத்தடியில் வந்து நின்றான் ; அண்ணாந்து பார்த்தான். ஒரு கிளையில் புறா ஒன்று உட்கார்ந்திருந்தது. அதனைக் கண்டதும் வேடன் வில்லை வளைத்தான். அம்பை நாணில் வைத்துக் குறி பார்த்தான். அதே நேரத்தில் அப்புறாவைப் பற்றித் தின்ன ஒரு பருந்து வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

2. வேடன் நின்ற இடத்தில் எறும்புப் புற்று ஒன்று இருந்தது. குறி பார்த்துக் கொண்டிருந்த வேடன், ஒரு காலைப் புற்றின் மேல் வைத்தான். அப்பொழுது ஒரு பெரிய எறும்பு அவன் காலை 'வெடுக்' கென்று கடித்தது. அவன் துள்ளிக் குதித்தான். அதனால் அவன் வைத்த குறி தவறிற்று ; ஆனால் கையில் இருந்த அம்பு சென்றுவிட்டது. அந்த அம்பு புறாவின்மீது படவில்லை ; புறாவைப் பற்றிக்கொண்டு செல்ல மேலே பறந்து கொண்டிருந்த பருந்தின்மேல் பட்டது. பருந்து கீழே விழுந்தது. புறா மரத்தை விட்டுப் பறந்து போயிற்று. வேடன் வெறுங்கையாய் வீடு சேர்ந்தான்.

"நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்."

**வினாக்கள்**

1. *வேடன் எங்குச் சென்றான்?*
2. *அவன் குறி பார்த்த பறவை எது?*
3. *புறாவைப் பற்றிக்கொண்டு போக நினைத்தது எது?*
4. *புறா எப்படித் தப்பியது?*
5. *பருந்துக்கு என்ன நேர்ந்தது?*

# 12. தீபாவளி

1. மக்கள், மனம் மகிழ்ச்சி அடைவதற்காகப் பல வகைப் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். பண்டிகை என்பதை விழா என்றும் கூறுவர். பண்டிகைக் காலங்களில் அவர்கள் தொழில் செய்யப்-போகாமல் ஓய்வு கொள்கிறார்கள். பண்டிகை நாளில் மக்கள் உண்டு, உடுத்து மகிழ்கிறார்கள். அன்று அவர்கள் மனைவி மக்களுடனும், உற்றார் உறவினருடனும் கலந்து பேசி மகிழ்கிறார்கள். தினமும் போல அல்லாமல், அன்று விசேஷமான தின்பண்டங்களைச் செய்து உண்கிறார்கள். அவ்வாறு மகிழும் பண்டிகைகளுள் தீபாவளி ஒன்று.

2. 'தீப - ஆவளி' என்பது தீபங்களின் வரிசை என்று பொருள்படும். தீபம் என்பது விளக்கு. தீபாவளி, விளக்குகளை வரிசையாக வைத்து அலங்கரிக்கும் விழாவாகும். தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முந்திய நாளில் வரும்.

3. தீபாவளியன்று பொழுது விடிவதற்கு முன்பே மக்கள் எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள். புதிய ஆடைகளை உடுத்திக்கொள்வார்கள்; அணிகளை அணிந்துகொள்வார்கள். பல வகைத் தின்பண்டங்களைச் செய்து, குடும்பத்தவர் எல்லாரும் மகிழ்ந்து உண்பார்கள்; நண்பர், உறவினர்களுக்கும் அளிப்பார்கள்.

4. தீபாவளிப் பண்டிகை என்றால் சிறுவர் சிறுமியர்க்குக் கொண்டாட்டம் அதிகம். புதிய ஆடைகள், தின்பண்டங்கள் கிடைப்பது மட்டுமல்ல ; அன்று சிறுவர்கள் பட்டாசுகளை வெடிப்பார்கள் ; மத்தாப்புக்களைக் கொளுத்துவார்கள். பல வகை வெடிகளின்



சத்தம் அன்று காதைச் செவிடாக்கிவிடும். பல நிற மத்தாப்புக்களைச் சிறுவர்கள் கொளுத்தி மகிழ்வார்கள். முன்பு பட்டாசுகளும், மத்தாப்புக்களும் சீனாவிலிருந்து தருவிக்கப்பட்டு வந்தன. ஆதலால் பட்டாசுகளுக்குச் 'சீன வெடி' என்ற பெயர் அமைந்தது. இக்காலத்தில் இந்தியாவில் உள்ள தீக்குச்சித் தொழிற்சாலைகளிலேயே பட்டாசுகளும், மத்தாப்புக்களும் செய்யப்படுகின்றன.

5. வடநாட்டினர் தீபாவளி அன்று செல்வத்திற்குத் தெய்வமான திருமகளை வணங்குவார்கள். அன்று வட நாட்டில் வீடுகளில் வரிசை வரிசையாகத் தீபங்கள் ஏற்றி அலங்கரிப்பது போலத் தென்னாட்டில் செய்யும் வழக்கம் இல்லை.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| மகிழ்ச்சி | மனைவி | கொண்டாட்டம் |
| பண்டிகை | மத்தாப்பு | தொழிற்சாலை |
| விழா | நண்பர் | வித்தியாசம் |
| உறவினர் | பட்டாசு | தென்னாடு |

### பயிற்சி

1. விடை எழுது:

அ. பண்டிகை என்பதற்குப் பொருள் யாது?
ஆ. தீபாவளி என்பதற்குப் பொருள் யாது?
இ. இந்துக்கள் தீபாவளியன்று என்ன செய்வார்கள்?
ஈ. வடநாட்டில் தீபாவளி எவ்வாறு கொண்டாடப்படுகிறது?
உ. தீபாவளி விழா சிறுவர் சிறுமியர்க்கு அதிக மகிழ்ச்சி தருவது ஏன்?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

| | | | |
|---|---|---|---|
| மகிழ்ச்சி | × | பலவகை | × |
| விசேஷமான | × | சிறுவர் | × |

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

மகிழ்ச்சி–சிறுவர்–சிறுமியர் – பண்டிகை – விழா – தீபம் – வரிசை–எண்ணெய்–அலங்காரம்.

# 13. தமிழ் மொழி

(பாட்டு)

செந்தமிழ் மொழியின் சிறப்பெல்லாம்
செப்பிடின் ஆண்டுகள் பலவாகும்;
முந்தையர் தந்த முதுமொழியாம் ;
மூவகை யான தமிழ்மொழியாம் ! 1

தேனினும் இனிய சுவைதருமாம் ;
தேவரும் விரும்பும் தமிழ் மொழியாம் ;
வானினும் பரந்த தமிழ்மொழியாம் ;
வளத்தில் சிறந்த தமிழ்மொழியாம் ! 2

கடவுளர் விரும்பும் தமிழ்மொழியாம் ;
காசினி போற்றும் தமிழ்மொழியாம் ;
மடமையை அகற்றும் தமிழ்மொழியாம் ;
மன்னரும் ஏற்றும் தமிழ்மொழியாம் ! 3

நூல்பல உடையது தமிழ்மொழியாம் ;
நுட்பம் மிக்கதும் தமிழ்மொழியாம் ;
நால்வகைப் பாவால் நானிலத்தை
நன்குபு ரந்ததும் தமிழ்மொழியாம் ; 4

வள்ளுவன், கம்பன், இளங்கோவும்
வகுத்தநல் நூல்கொள் தமிழ்மொழியாம் ;
தெள்ளிய தெய்வத் தமிழ்மொழியாம் ;
தேவர்கள் பாக்கொள் தமிழ்மொழியாம் ! 5

பெற்றதாய் போன்றது தமிழ்மொழியாம் ;
பீடுற வைப்பதும் தமிழ்மொழியாம் ;
கற்றவர் போற்றிடும் தமிழ்மொழியாம் ;
கண்ணிய மாய்அதைப் போற்றுவமே ! 6

— *கௌணியன்*

## அரும்பத உரை

1. செப்பிடின் – சொன்னால், ஆண்டுகள் – வருடங்கள், முந்தையர் – முன்னோர், முதுமொழி – பழைமையான மொழி, மூவகை – இயல்தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

2. வானினும் – ஆகாயத்தைவிட, வளமை – செழுமை.

3. கடவுளர்–தேவர்கள். காசினி–பூமியிலுள்ள மக்கள், மடமை–அறியாமை.

4. நுட்பம்–ஆராய்ந்து காணத்தக்க அரிய விஷயங்கள், நால்வகைப் பா–நான்கு வகைப் பாட்டுக்கள், நானிலம்–பூமி, புரந்ததும்–காப்பாற்றியதும்.

5. திருவள்ளுவன் இயற்றிய திருக்குறள், கம்பன் இயற்றிய இராமாயணம், இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரம், வகுத்த–எழுதிய, தேவர்கள்பா - தேவார, திருவாசக, திவ்விய பிரபந்தம்.

6. பீடுற-புகழ் உண்டாகும்படி, கண்ணியமாய்-பெருமையாக, போற்றுவோம்–வணங்கிக் காப்போம்.

இவற்றைக் கவனித்துப்படி:

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| எழுதினேன் | எழுதுகிறேன் | எழுதுவேன் |
| படித்தாய் | படிக்கிறாய் | படிப்பாய் |
| ஓடினான் | ஓடுகிறான் | ஓடுவான் |
| உண்டான் | உண்கிறான் | உண்பான் |
| பாடிற்று | பாடுகிறது | பாடும் |
| மேய்ந்தது | மேய்கிறது | மேயும் |
| தின்றேன் | தின்கிறேன் | தின்பேன் |
| பார்த்தாய் | பார்க்கிறாய் | பார்ப்பாய் |
| அழுதான் | அழுகிறான் | அழுவான் |
| வணங்கினேன் | வணங்குகிறேன் | வணங்குவேன் |

# 14. கவரி வீசிய காவலன் [நாடகம்]

## முதற்களம்

| | |
|---|---|
| **இடம்:** | *அரசனது அரண்மனையில் ஒரு பகுதி* |
| **காலம்:** | *முற்பகல்* |
| **பாத்திரம்:** | *புலவர் ஒருவர்* |

**தமிழ்ப் புலவர்:** (தமக்குள் பேசிக்கொள்கிறார்.) என்ன உலகம்! எவ்வளவு படித்திருந்தால்தான் என்ன? கையில் காசில்லாதவனை யார் மதிக்கிறார்? 'பணம் இல்லாதவன் பிணம்' என்பது சரியே. நம் ஊரை விட்டு நூற்று நாற்பது மைல் நடந்து வந்தோம். உணவும் தக்கவாறு இல்லை. இதோ, அரண்மனையை அடைந்து விட்டோம். இனி அரசனை எப்படியும் பார்ப்போம். நம் பாட்டைப் படித்துக் காட்டுவோம். சேர மன்னன், தமிழின் சுவை அறிந்தவனும். ஆதலால் ஏதேனும் தக்க பரிசு நமக்குக் கொடுப்பான். நம் வறுமை நீங்கி விடுவது நிச்சயம். (அருகில் இருந்த முரசு கட்டிலைக் கண்டு அதன் அருகில் செல்கின்றார்.) சற்று நேரம் இந்தக் கட்டிலில் படுத்துக் கிடந்து, களைப்பாறிவிட்டுச் செல்வோம். தூக்க மயக்கத்திளுல் கண்கள் சுழல்கின்றன. இங்குச் சேவகர் யாரையும் காணோம். அதுவும் நல்லதே. சற்றுப் படுத்துக் களைப்பாறுவோம்.

*[புலவர் கட்டிலில் படுத்து அயர்ந்து தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறார்.]*

## இரண்டாம் களம்

| | |
|---|---|
| **இடம்:** | *அரண்மனையில் முரசு கட்டில் வைக்கும் முற்றம்* |
| **காலம்:** | *நண்பகல்* |
| **பாத்திரங்கள்:** | *புலவர், அரசன், பிரதானியர்* |

*[சேர மன்னன், பிரதானியர் பின்வர முன்னே வருகிறான். கட்டிலில் உறங்கும் புலவரைக் காண்கிறான்.]*

**சேர மன்னன் :** ஆ! முரசு கட்டிலில் யாரோ படுத்துத் தூங்குகிறான். அவனுக்கு எவ்வளவு துணிவு! முரசு கட்டிலில் உறங்கலாமா? உறங்கினால் அவன் தலைவெட்டப்படுவது நிச்சயம் என்பது எல்லாருக்கும் தெரியுமே! அப்படியிருந்தும் எவனோ அதிற் படுத்து உறங்குகிறான். அவனுக்கு எவ்வளவு கர்வம் இருக்க வேண்டும்!

*[அரசன் கோபத்தோடு உறையிலிருந்து வாளை உருவியபடி கட்டிலின் அருகே வருகிறான்.]*

ஆ! மோசிகீரனார்! தமிழ்ப் பெரும் புலவர்! இவரை வெட்டிவிடப் பார்த்தேனே! ஐயோ பாவம்! நீண்ட தூரம் நடந்து வந்திருக்கிறார் போலும்! அதனால்




களைப்புற்றிருக்கிறார்; அயர்ந்து தூங்குகிறார்; தூங்குகிறவரை எழுப்புதல் ஆகாது. (வேலையாளைப் பார்த்து) யாரடா அங்கே. கவரி கொண்டு வா.

*[வேலையாள் கவரி கொண்டு வருகிறான். அரசன் அதை வாங்கிப் புலவர் களை தெளிய வீசுகிறான். புலவர் கண் விழிக்கிறார்.]*

*[கண்விழித்த புலவர் அரசனைக்கண்டு திடுக்கிட்டு எழுகிறார் : அச்சத்தால் உடல் நடுங்குகிறது.]*

**அரசர் :** புலவர் பெருமானே, அஞ்ச வேண்டா ; உடல் நடுங்க வேண்டா ; உமக்கு ஒரு தீங்கும் நேராது. இன்னும் சற்று நேரம் உறங்கலாம்.

**புலவர் :** அரசர்க்கு அரசரே, நான் அறியாமல் பெருங் குற்றம் செய்துவிட்டேன். அது மன்னிக்க முடியாத குற்றம். அக்குற்றத்திற்குத் தண்டனை உமது கை வாளால் என் தலையை வெட்டுவது-தான். நான் நீண்ட தூரம் வழி நடந்து வந்தேன். எனக்கு உண்டான களைப்பால் முரசு கட்டில் என்பதைக் கவனிக்கவில்லை. மதிமயங்கி அதன் மேல் படுத்து உறங்கிவிட்டேன். அதற்காக என் தலையை நீர் வெட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. அதற்கு மாறாகக் கவரி கொண்டு வீசினீர். இச்செய்கை உமது தமிழ் அன்பை அல்லவா வெளிப்படுத்துகிறது ? உமக்குத் தமிழ்ப் புலவரிடம் உள்ள மதிப்பை அல்லவா தெரிவிக்கிறது ? நீர் நீடூழி வாழ வேண்டும் ! உமது புகழ் உலகெலாம் பரவ வேண்டும் !

**அரசர் :** புலவரே, என்னை அளவு கடந்து புகழ்கிறீர். நீர் பெருந்தவறு ஏதும் செய்துவிடவில்லை. உம் தளர்ச்சியும் சோர்வும் உம்மை அவ்வாறு செய்யும்படி செய்தன. கவலை வேண்டா. வாருங்கள் அரண்மனைக்குச் செல்லலாம்.

*(அரசனும் புலவரும் செல்கின்றனர்.)*

**அரும்பதங்கள்**

| | | | |
|---|---|---|---|
| பந்தி | முற்றம் | முரசு | தண்டனை |
| தக்கவாறு | சூழல்கின்றன | நிச்சயம் | கவரி |
| •பரிசு | சோர்வு | விண் | தளர்ச்சி |

## பயிற்சி

I விடை எழுது:

அ. இந்நாடகத்தின் கதையை எழுது.

ஆ. பணமில்லாதவனைப் பற்றிய பழமொழி யாது?

இ. புலவர் அரசனைப் பற்றி எண்ணியது என்ன?

ஈ. அரண்மனை முற்றத்தில் புலவர் எதனைக் கண்டார்? என்ன நினைத்தார்?

உ. அரசர் புலவரைக் கண்டு எண்ணியது என்ன?

ஊ. புலவர் விழித்து எழுந்து அரசனைக் கண்டு யாது கூறினார்?

எ. புலவர் பெயர் யாது?

ஏ. அரசன் புலவருக்குச் செய்தது என்ன?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

இல்லாதவன் ×
அறிந்தவன் ×
அருகில் ×
உறக்கம் ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

சுவை-பரிசு-வறுமை-நிச்சயம்-களைப்பு-துணிவு - கர்வம்-அயர்ந்து-திங்கு-குற்றம்-தவறு-அரண்மனை.

# 15. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
3. அகல உழுவதினும் ஆழ உழு.
4. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
5. கெடுவான் கேடு நினைப்பான்.
6. நாம் ஒன்று நினைத்தால்
   தெய்வம் ஒன்று நினைக்கும்.
7. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
8. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
9. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
10. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
11. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
12. காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு.
13. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
14. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
15. சுத்தம் சோறு போடும்.
16. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

# 16. இந்தியா

1. நாம் வசிக்கும் நாடு இந்தியா. இதற்குப் **பாரத தேசம், பரதக் கண்டம்** என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இந்தியா மிகப் பெரிய தேசம். இதில் பல உயர்ந்த மலைகள் இருக்கின்றன; நீண்ட ஆறுகளும் ஓடுகின்றன. இந்தியா ஒரு விவசாய நாடு. இந்நாட்டில் கிராமங்களே அதிகம். பல நகரங்களும் உண்டு.

2. உலகில் உள்ள மலைகளுள் உயர்ந்தவை இமய மலைகள். அவை இந்தியாவின் வடக்கில் உள்ளன. அவற்றில் மிக உயர்ந்த சிகரங்கள் உள்ளன. அவற்றுள் எவரெஸ்டு என்பது மிக உயர்ந்தது. இமயமலை எக்காலத்திலும் பனியால் மூடப்பட்டிருப்பதால், அப்பெயர் பெற்றது. இமம் என்னும் சொல்லுக்குப் **பனி** என்பது பொருள். இமய மலையிலிருந்து கங்கை, **சிந்து, பிரம்மபுத்திரா** என்னும் நதிகள் தோன்றுகின்றன.

3. இந்தியாவின் நடுவில் விந்திய மலைகளும், சாத்பூரா மலைகளும் உள்ளன. தென் இந்தியாவில் மேற்கு மலைத் தொடரும், கிழக்கு மலைத்தொடரும் இருக்கின்றன. விந்திய மலைக்குத் தெற்கே **கோதாவரி, கிருஷ்ணா,** காவிரி, வைகை, **தாம்பிரபரணி** முதலிய ஆறுகள் ஓடுகின்றன. இந்நதிகளும் இவற்றின் துணை நதிகளும், கிளை நதிகளும் இந்நாட்டை வளம்படுத்துகின்றன. ஆதலால் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர் வகைகள் செழித்து வளர்கின்றன.

4. இந்தியாவில் டில்லி, பாட்னா, கல்கத்தா, காசி, பம்பாய், சென்னை, திரிசிராப்பள்ளி, மதுரை,

திருநெல்வேலி போன்ற பெரிய பட்டணங்கள் உள்ளன. இந்தியாவின் தலைநகர் டில்லி.




5. தென்னுட்டில் இருப்பவர்கள் வடக்கே உள்ள காசிக்கும், வட நாட்டில் இருப்பவர்கள் தெற்கே உள்ள இராமேசுவரத்திற்கும் யாத்திரை செய்கிருர்கள்.

இவை இரண்டும் இந்துக்களுக்கு முக்கியமான புண்ணிய தலங்கள்.

6. இந்தியாவில் புத்தர், வர்த்தமானர், சங்கரர், சம்பந்தர் போன்ற மதபோதகர் தோன்றினர். பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தியடிகள் போன்ற தேசபத்தர் பலர் நமது நாட்டில் தோன்றியுள்ளனர். காளிதாசர், திருவள்ளுவர், ஔவையார், கம்பர், ரவீந்திரநாதர், பாரதியார், போன்ற புலவர் பலர் தோன்றி யுள்ளனர்.

7. இந்தியாவில் தஞ்சைப் பெரிய கோவில், மதுரை மீனுட்சி கோவில், தாஜ்மஹால் போன்ற சிறந்த கட்டடங்கள் பல உண்டு. அஜந்தா, எல்லோரா போன்ற குகைகளின் சுவர்களில் அழகிய வண்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. அவை வெகுகாலத்துக்கு முற்பட்டவை. மகாபலிபுரத்தில் கருங்கற்பாறைகளில் அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டு உள்ளன. பொன், இரும்பு, நிலக்கரி முதலியவை நம் நாட்டில் நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன.

8. இவற்ருல் நாம் அறிவது யாது? நமது நாடு எல்லா வளங்களும் நிறைந்தது. ஆதலால் நாம் எல்லாரும் ஒற்றுமையாக இருந்து அவற்றைப் பயன் படுத்த வேண்டும். அப்போது நாமும் சுகமாக வாழலாம். நமது நாடும் பெருமையோடு விளங்கும்.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| *விவசாய நாடு* | *சிகரங்கள்* | *உபநதி* |
| *கிளை நதி* | *வளம்படச்செய்* | *செழித்து* |
| *யாத்திரை* | *இந்துக்கள்* | *வண்ணம்* |
| *ஒற்றுமை* | *துணை நதி* | *சித்திரம்* |

## பயிற்சி

I. விடை எழுது:

அ. நமது நாட்டின் வடக்கில் உள்ள மலைகள் எவை?

ஆ. எவரெஸ்டு என்பது யாது? அது எங்கிருக்கிறது?

இ. நமது நாட்டில் பாயும் நதிகளில் மூன்றின் பெயரை எழுது.

ஈ. சிறந்த பட்டணங்கள் மூன்றின் பெயர்களைக் கூறு.

உ. நமது நாட்டுப் புலவர்களுள் நால்வர் பெயரை எழுது.

ஊ. மகாபலிபுரம் எதற்குப் பெயர் பெற்றது?

எ. நமது நாட்டை விவசாய நாடு என்று கூறக் காரணம் என்ன ?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

உயர்ந்த ×
மூடு ×
பெரிய ×
தென்றல் ×

3. கீழே வந்துள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

சிகரம் –வளம்–பட்டணங்கள் – யாத்திரை – மதபோதகர்–சிறந்த–பெருமை.




# 17. காங்கோ நாட்டுக் குள்ளர்கள்

1. ஆப்பிரிக்கா என்பது ஒரு கண்டம். கண்டம் என்பது ஒரு பெரிய நிலப் பிரிவு. ஆப்பிரிக்கா இந்தியாவுக்குத் தென்மேற்கில் வெகு தொலைவில் இருக்கிறது. ஆப்பிரிக்காக் கண்டத்தில் பல பெரிய ஆறுகள் ஓடுகின்றன. அவற்றுள் ஒன்று காங்கோ நதி. காங்கோ நதியின் இரு கரைகளிலும் வெகுதூரம் வரை காடுகள் அடர்ந்து இருக்கும். அக்காடுகளில் ஒருவகை மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்குப் பிக்மிக்கள் என்பது பெயர்.

2. பிக்மிக்கள், ஏறக்குறைய நான்கடி உயரமே இருப்பார்கள். நம்மைப் போன்ற சாதாரண மக்களின் உயரம் ஐந்தடிக்குமேல் இருக்கும். பிக்மிக்கள் வாழும் காடுகளில் யானை, மான் போன்ற பலவகை விலங்குகள் காணப்படும். அங்குக் குரங்குகள் அதிகம். பலவகையான பறவைகளும் உண்டு. உண்ணக்கூடிய பழம் தரும் மரங்களும் உள்ளன.

3. பிக்மிக்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்பவர் அல்லர். அவர்கள் செல்லும் காடுகளில் மரங்களை எரித்து இடம் உண்டாக்குவார்கள். அங்குத் தங்கஞக்குச் சிறு குடிசைகள் அமைத்துக் கொள்வார்கள். அவர்கள் மரக்கிளைகளை நட்டு, அவற்றின் முனைகளை வளைத்து ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டுவார்கள்; அல்லது மறுபக்கத்தில் நடுவார்கள். அவற்றின்மேல் மரப்பட்டை, வாழையிலை, காட்டுப் புல் முதலியவற்றைப் போட்டு வண்டிக் கூண்டுபோல் அமைப்பார்கள். ஒரு குடிசையில் சிலரே இருக்கலாம்.

4. பிக்மிக்கள் நிலத்தைப் பயிரிடுவதில்லை. வேட்டையாடுவதே அவர்கள் தொழில். வில்லும் அம்பும் கொண்டு அவர்கள் திரிவார்கள். யானைகளை வேட்டையாடுவார்கள், அவர்கள் அதன் மாமிசத்தைப் புசிப்பார்கள். அவர்கள் குரங்கு, மான் ஆகியவற்றின் மாமிசங்களையும் தின்பார்கள் ; காய், கனி, கிழங்கு, ஆகியவற்றையும் தின்பார்கள். அவர்களுக்குத் தேன் சாப்பிடுவதில் பிரியம் அதிகம். நான்கே அடி உயரம் உள்ள ஒவ்வொரு பிக்மியும் ஒரு தாறு வாழைப் பழங்களைத் தின்றுவிடுவானும்.

5. அவர்கள் வாழும் காட்டில் வருஷம் முழுவதும் மழை பெய்யும். மழை பெய்யும்போது பிக்மிக்கள் உணவுக்குக் கஷ்டப்படுவார்கள். அப்போது அவர்கள் எலிகளையும் தவளைகளையும் சாப்பிடுவார்கள். அவர்கள் உணவைச் சமைத்து உண்பதில்லை.

6. பிக்மிக்களில் ஆண்கள் ஒரு சிறு ஆடையை உடுப்பார்கள். பெண்கள் இலைகளைக் கட்டிக் கொள்வார்கள். அவர்கள் குள்ளமாக இருந்தாலும் வலிமையும் தைரியமும் உடையவர்கள்; புதியவர்களைக் கண்டால் வெட்கத்தால் ஓடி ஒளி-

வார்கள்; மறைந்திருந்து அம்புவிட்டுக் கொல்வார்கள். அவர்கள் அம்புகளின் முனைகளுக்கு விஷம் தடவி வைப்பார்கள். அவர்கள் வட்டமாக நின்று நடனம் ஆடுவதில் விருப்பம் உடையவர்கள்.

7. அவர்கள் வியாபாரம் செய்வது விநோதமாக இருக்கும். அவர்கள் தாங்கள் வேட்டையாடிய விலங்குகளின் மாமிசத்தைக் காட்டின் எல்லையில் கொண்டுபோய் மரக்கிளைகளில் கட்டிவிட்டு வந்து விடுவார்கள். அருகில் வசிக்கும் நீக்ரோக்கள் அங்கு வந்து மாமிசத்தை எடுத்துக்கொள்வார்கள். பதிலுக்கு வாழைப்பழத் தாறுகளும், அம்புகளும் வைத்துச் செல் வார்கள். இந்த வியாபாரம் விநோதமாக இல்லையா ?

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| வடிவம் | பெருந்துன்பம் | வட்டமாக |
| ஏறக்குறைய | கட்டுப்பாடு | நடனம் |
| பிரதேசம் | கரடுமுரடான | அடர்ந்த |

### பயிற்சி

1. விடை எழுது:

அ. காங்கோ நதி எங்குள்ளது?
ஆ. அந்நதியின் கரைகள் எவ்வாறு உள்ளன?
இ. பூமத்திய ரேகை என்பது என்ன?
ஈ. பிக்மிக்கள் வாழும் காட்டில் என்ன கிடைக்கின்றன?
உ. பிக்மிக்களின் குடிசையைப் பற்றி எழுது.
ஊ. பிக்மிக்களின் தொழில் என்ன?
எ. அவர்களுக்கு எவற்றில் விருப்பம் அதிகம்?

2. கீழ் உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைக்கவும்:

ஏறக்குறைய, அடர்ந்த, துன்பம், வட்டமாக, கரடு முரடான.

8. எதிர்ப் பதங்கள் எழுது:

குள்ளம் ×
தொலைவு ×
முன்பக்கம் ×
சிறிதும் ×



# 18. கிராம மக்கள்

1. நம் தாய் நாடான இந்தியா நீர் வளம் நில-வளம் சிறந்து விளங்குகிறது. இந்நாட்டில் சிறப்பாகப் பயிர்த் தொழில் நடைபெற்று வருகிறது. அதனால் இந்நாட்டில் நகரங்களைக் காட்டிலும் கிராமங்களே அதிகமாகும்..

2. கிராமத்தில் வசிக்கும் மக்கள் அதிகாலையில் எழுந்திருக்கிறார்கள். ஆண்கள் எழுந்தவுடனே கலப்-பை, மண் வெட்டி முதலியவற்றோடு காளைகளை ஓட்டிக் கொண்டு வயலுக்குச் செல்கிறார்கள். பெண்கள் எழுந்தவுடனே வீடு வாசல்களைச் சுத்தம் செய்கிறார்கள். பிறகு குடத்தை எடுத்துக் கொண்டு குளத்துக்குச் சென்று, குளித்துவிட்டுத் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். பிறகு வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார்கள். இவ்வாறே கிராமத்தில் வசிக்கும் அனைவரும் காலையில் எழுந்தவுடனே தம் தம் தொழிலைச் செய்யத் தொடங்குகிறார்கள்.

3. பயிர்த் தொழில் செய்யும் வேளாளருக்கு உதவியாகப் பல தொழிலாளர் கிராமங்களில் வசிக்கின்றனர். வேளாண்மைக்குத் தேவையான கலப்பை பறம்புப் பலகை முதலியன செய்து கொடுக்கத் தச்சர் வேண்டும். மண்வெட்டி, அரிவாள், கோடரி, கொழு, இறைசால் முதலியன செய்து கொடுக்கக் கொல்லர் வேண்டும். வண்டி செய்ய இவ்விருவரும் வேண்டும்.

4. ஆடை நெய்யக் கைக்கோளர் வேண்டும். துணி வெளுக்கச் சலவைத் தொழிலாளரும், நகைகள் செய்யத் தட்டாரும், மண் பாண்டங்கள் செய்யக் குலாலரும், செம்பு பித்தளைப் பாத்திரங்கள் செய்யக் கன்னுரும், வீடு, கிணறு முதலியன கட்டக் கொத்தரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கோவிலில் பூசை செய்யக் குருக்களும், பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க உபாத்தியாயரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராம மக்களாகிய இத்தொழிலாளர் அனைவரும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு எண்ணுமல் அன்புடையவராய் ஒற்றுமையோடு வாழ்கிருர்கள். எனவே கிராம வாழ்க்கை சிறப்பாகவும் இன்பமாகவும் இருக்கின்றது. இத்தொழிலாளர்களுள் பலருக்கு எல்லாக் காலத்திலும் வேலை இராது அல்லவா ? வேலை இல்லாத காலத்தில் அத்தொழிலாளரும் பயிர்த் தொழிலைச் செய்வர்.

5. கிராம மக்களுக்கு வேண்டிய பொருள்களைத் தருவித்து அவர்களுக்கு விற்பதும், அவர்களிடம் உள்ள பொருள்களை வாங்கி வெளியிடங்களுக்கு அனுப்புவதும் வியாபாரிகள் வேலை. அவர்கள் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை உடையவர்கள். அவர்களிடம் உண்மை, உழைப்பு, முயற்சி, ஒற்றுமை, உபகாரம் முதலான நல்ல பண்புகள் ஓங்கி வளர்கின்றன.

6. கிராமங்களில் தூய காற்றும், பசுமையான காய்கறிகளும் கிடைக்கின்றன. மக்களுக்கு உழைப்-பும் இருத்தலால் அவர்கள் உடல்உரம் பெற்று வாழ்-கிறார்கள்.

7. கிராமங்களில் மேய் புலங்கள் உள்ளன. ஆதலால் கிராம மக்கள் ஆடு, மாடு, பசு, எருமை முதலியனவற்றை வளர்க்கிறார்கள். அவற்றால் அவர்கள் தயிர், பால், நெய் முதலியன பெற்றுப் பயன் அடைகிறார்கள். எனவே கிராம வாழ்க்கை மிக்க இன்பம் தரும் வாழ்க்கையாக அமைகிறது.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| தாய்நாடு | வேளாளர் | உபாத்தியாயர் |
| நீர்வளம் | கோடரி | ஒற்றுமை |
| நிலவளம் | கொழு | உயர்வு தாழ்வு |
| அதிகாலை | கைக்கோளர் | ஆடம்பரம் |
| தொடங்கு | குருக்கள் | |

### பயிற்சி

1. *விடை எழுது :-*

   அ. வேளாளர் காலையில் செய்வது யாது?
   ஆ. கிராமப் பெண்கள் காலையில் செய்யும் வேலைகள் யாவை?
   இ. கிராமத்தில் வாழும் தொழிலாளர் யாவர்?
   ஈ. கிராம வாழ்க்கையின் பெருமைகள் யாவை?

2. *எதிர்ப் பதங்கள் எழுது :*

   செல்வார்கள் ×
   தொடங்கு ×
   கொடு ×
   இன்பம் ×

3. *கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :*

   நீர்வளம் – நிலவளம் – எளிய – அதிகாலை – ஒற்றுமை – வாழ்க்கை – கல்வி – சிறப்பாக

# 19. மழைப் பாட்டு

மழையே மழையே வாவா !
மனது குளிர ஓடிவா.
வானில் இருந்து வாவா !
வாடிய செடிமேல் ஓடிவா. 1

மலையின் மேலே ஏறிவா
மடுவில் சேர ஓடிவா.
கத்தரி காய்க்க வாவா !
இத்தரை மீது ஓடிவா. 2

காயும் பழமும் உன்னாலே ;
கருப்பு நீங்குவது உன்னாலே ;
கோயில் பூசை உன்னாலே ;
குடிகள் சிறப்பது உன்னாலே. 3

உழவும் விதைப்பும் உன்னாலே ;
உண்டு உடுப்பதும் உன்னாலே ;
விளைவும் அறுப்பும் உன்னாலே ;
உயிர்கள் வாழ்வதும் உன்னாலே. 4

அரும்பதவுரை

1. வானம்—ஆகாயம்;
2. மடு—பள்ளம்;
3. கருப்பு—பஞ்சம்;
குடிகள்—நாட்டு மக்கள்;
4. உடுப்பது—ஆடை அணிவது
உயிர்கள்—மக்கள், மிருகம், பறவை முதலியன.

# 20. மௌன வாசிப்பு – 2

*கீழே உள்ள கதையை மனத்திற்குள் படித்து வினைக் களுக்கு விடை எழுது :*

## சமயோசித புத்தி

1. ஒரு காட்டில் குளம் ஒன்று இருந்தது. அதன் கரையில் ஒரு நாவல் மரம் இருந்தது. நாவல் மரத்தில் ஒரு குரங்கும், குளத்தில் ஆண், பெண் முதலைகள் இரண்டும் வசித்து வந்தன. குரங்கும் ஆண் முதலை யும் நட்பாயிருந்தன. குரங்கு முதலைக்குத் தினந்-தோறும் நாவற்பழங்கள் கொடுத்து வந்தது. முதலை சில பழங்களைத் தின்னும். சில பழங்களைப் பெண் முதலைக்கும் கொண்டு போய்க் கொடுக்கும்.

2. ஒரு நாள் பெண் முதலை ஆண் முதலையைப் பார்த்து, ''நீ கொடுக்கும் நாவற்பழங்கள் மிக்க சுவை உள்ளவையாய் இருக்கின்றன. அவற்றைத் தின்று நான் மகிழ்கிறேன். ஆனால், நம்மைக்காட்டிலும் நாவற் பழத்தை மிகுதியாகத் தின்பவன் உன் நண்பனாகிய குரங்கு. அவன் வயிற்றிலுள்ள ஈரல் நாவற்பழச்சாறு ஊறி மிகவும் இனிமையாக இருக்கும். அதனைத் தின்-றால் எனக்கு மேலும் அதிகமான இன்பம் உண்டாகும். ஆதலால் அதனைக் கொண்டுவந்து கொடு,'' என்று கேட்டது.

3. அதனைக் கேட்ட ஆண் முதலை, ''பெண்ணே, நீ சொல்வது முடியாது. நீ என் நண்பனைக் கொல்லப் பார்க்கிறாய். அது மிகவும் பாவம். உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினைக்க வேண்டாவா?'' என்றது. ஆனால் பெண் முதலை அதற்கு ஒப்பவில்லை. அது பிடிவாத மாக, ''நான் அதனைத் தின்றே ஆகவேண்டும். இல்லா விட்டால் நான் உயிர் விடுவேன்,'' என்றது.

4. ஆண் முதலை ஒன்றும் சொல்ல முடியவில்லை. அது குளக்கரைக்கு வந்து மிக்க விசனத்தோடு தங்கி இருந்தது. குரங்கு வந்து, 'நண்பா, நீ ஏன் இன்று விசனத்தோடு இருக்கிறாய்?' என்று கேட்டது. அதற்கு முதலை "நண்பா, இன்று என் மனைவி, 'வெட்கமற்றவனே' என்று என்னை ஏசி விட்டாள். 'நீ மட்டும் தினந்தோறும் நண்பனிடமிருந்து நாவற்பழம் பெறுகிறாய். அவனை ஒரு நாளாவது நம் வீட்டிற்கு விருந்திற்கு அழைக்க வேண்டாவா? இன்று அழைத்து வா,' என்று கூறினாள். உன்னைக்கூப்பிட்டால் நீ வருவாயோ என்னவோ என்று வருத்தமாக இருக்கிறேன்," என்றது. அதனை உண்மை என்று நம்பிய குரங்கு, "நான் நீரில் எப்படி வர முடியும்?" என்று கேட்டது. "நீ என் முதுகில் ஏறிக் கொள்; நான் தூக்கிச் செல்கிறேன்" என்றது முதலை.

5. குரங்கு முதலை முதுகில் ஏறிக்கொண்டது. முதலை நீந்திக் கொண்டு நடுக் குளத்திற்குச் சென்றது. அப்போது முதலை 'இனிக் குரங்கு தப்பியோட முடியாது' என்று எண்ணியது. ஆதலால் தன் மனைவியின் கருத்தை வெளியிட்டது. அதனைக் கேட்ட குரங்கு, "நண்ப, இதனை அப்பொழுதே சொல்லக்கூடாதா? நாவற்பழச் சாற்றினால் நனைந்திருந்த என் ஈரலை மரக் கிளையில் உலர்த்திவிட்டு வந்துவிட்டேனே," என்றது. முதலை "நான் கொண்டுபோய்க் கரையில் விடுகிறேன். அதனை எடுத்துத் தருகிறாயா?" என்று கேட்டது. "நண்பனுக்கு இல்லாதது எனக்கு எதற்கு?" என்று சொல்லியது குரங்கு.

6. குரங்கை முதலை கரையில் கொண்டு போய் விட்டது. குரங்கு மரத்தின் மேல் ஏறிக் கொண்டு, "அற்பனே, நீ கொடியவன். என் முகத்தில் விழிக்-

காதே. போய்விடு,'' என்றது. முதலை நாணம் அடைந்து திரும்பியது.

## வினாக்கள்

1. குரங்கு எங்கே வசித்து வந்தது?
2. குரங்கின் நண்பன் யார்?
3. குரங்கு முதலைக்கு என்ன கொடுத்து வந்தது?
4. பெண் முதலை எதன் மீது ஆசைப்பட்டது?
5. ஆண் முதலை குரங்கை எப்படி ஏமாற்றிக் கொண்டு போயிற்று?
6. குரங்கு முதலையை எப்படி ஏமாற்றியது?
7. இக்கதையால் நீ அறிவது யாது?

இலக்கணம்—பால்

இவற்றைப் படி :

| ஆண் | பெண் |
|---|---|
| பாட்டன் | பாட்டி |
| அப்பா | அம்மா |
| மாமா | மாமி |
| மகன் | மகள் |
| சிறுவன் | சிறுமி |
| வேலைக்காரன் | வேலைக்காரி |

இலக்கணத்தில் ஆணின் பெயர் ஆண்பாற் பெயர்; பெண்ணின் பெயர் பெண்பாற் பெயர்.




# 21. உழவுத்தொழில்

1. மக்கள் வாழ்க்கை நடத்தப் பற்பல **தொழில்கள்** செய்கிருர்கள். அத்தொழில்கள் எல்லாவற்றிலும் சிறந்தது உழவுத்தொழில். இதனைப் பயிர்த் **தொழில், வேளாண்மைத் தொழில், கிருஷித்தொழில்** என்றும் கூறுவர். திருவள்ளுவரும் உழவுத் தொழிலே மிகவும் சிறந்தது என்று சொல்லி இருக்கிருர். உழுது வாழ்பவர்தாம் பிறர்க்கு ஊழியம் செய்யாதவர்; மற்றவர் எல்லாரும் பிறர்க்குத் தொண்டு செய்து வாழ்பவரே யாவர். உழவின் மேன்மைக்கு வேறு காரணமும் உண்டு. உணவு இல்லாமல் எவ்வுயிரும் வாழமுடியாது? அவ்வுணவுப் பொருள்கள் உழவுத்தொழிலால் அன்ருே கிடைக்கின்றன?

2. உழவுத் தொழிலைச் செய்பவர்க்கு **உழவர், விவசாயிகள், வேளாளர்** என்ற பெயர்கள் வழங்குகின்றன. பயிர் நிலம் **நன்செய், புன்செய்** என்று இருவகைப்படும். நீர் பாய்ச்சிப் பயிர் செய்யப்படும் நிலம் நன்செய். அதனை வயல், கழனி என்றும் கூறு-

வர். மழை நீரின் உதவியால் பயிர் செய்யப்படும் நிலம் புன்செய் எனப்படும். இது கொல்லைவெளி என்-றும் கூறப்படும்.

3. நன்செய் நிலத்தில் நெல்லும் கரும்பும் பயிர் செய்வார்கள். சில இடங்களில் வெற்றிலையும், புகையிலையும், வாழையும் பயிரிடப்படும். நெல்லும் கரும்-பும் அறுவடையான பின், உளுந்து, பயறு என்பன விதைப்பதும் உண்டு. கம்பு, சோளம், வரகு, மிளகாய், பருத்தி, காய்கறி என்பன புன்செய் நிலத்தில் விளைவன வாகும். எள்ளு, கொள்ளு, கடலை, மொச்சை, துவரை என்பனவும் புன்செய் நிலப் பயிர்களே.

4. வேளாளனுக்குப் பயிர்த்தொழில் செய்ய மிக்க உதவி செய்பவை மாடுகள். அவை அவனுக்கு வண்டி இழுக்கவும், ஏர் உழவும், நீர் இறைக்கவும் பயன்படுகின்றன. ஆடுமாடுகள் குடியானவனுக்கு மிகவும் அவசியமானவை. அவற்றின் சாணம் நல்ல எருவாகின்றது. பயிர்த் தொழிலுக்குப் பலவிதக் கருவிகள் வேண்டும். கலப்பை, மண் வெட்டி, களைக்-கொட்டு, அரிவாள், பரம்புச் சட்டம், இறைசால் முதலியன பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகளாம்.

5. நன்செய் நிலத்தில் நீர் பாய்ச்சிச் சேருக்கிப் பயிர் செய்வார்கள். அது சேடைப் பயிர் எனப்படும். புன்செய் நிலத்தை ஈரமுள்ள பொழுது உழுது, புழுதி யாக்கிப் பயிர் செய்வர். அது புழுதிக்கால் எனப்படும். நன்செய் நிலத்தில் விதை விதைத்தும், நாற்று நட்டும் பயிர் செய்வார்கள். இவை முறையே விதைத்தல் என்றும், நடவு என்றும் கூறப்படும்.

6. பயிர்த்தொழில் செய்பவர்க்கு ஆண்டில் ஆறு மாதந்தான் வேலை இருக்கும். அக்காலத்தில் உழுதல், நீர்ப்பாய்ச்சல், எருவிடல், விதைப்பு, நடவு,

களை பிடுங்கல், அறுவடை என்பன நடைபெறும். மற்ற ஆறுமாத காலம் விவசாயிகளுக்கு அதிகமான வேலை இராது. அவர்கள் அக் காலத்தில் பல சிறு குடிசைத் தொழில்களைச் செய்வார்களானால் இன்பமாக வாழலாம். நூல் நூற்றல், துணி நெய்தல், தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை வைத்தல் முதலியவை சில குடிசைத் தொழில்களாகும்.

உலகில் வாழும் உயிர்களுக்கு உணவுப் பொருள்களைப் பயிரிட்டு உதவும் உழவர் மேலானவர். அவர்களை இழிவாக நினைப்பது தவறு. அவர்களுக்கு வேண்டியவற்றை நாம் செய்யவேண்டும்.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| வேளாண்மை | ஊழியம் | மேன்மை |
| விவசாயி | கொல்லைவெளி | கோழிப்பண்ணை |

### பயிற்சி

**1. விடை எழுது:**

அ. உழவர் மற்றவரைக் காட்டிலும் மேலானவர் என்பதற்குக் காரணம் என்ன?
ஆ. நிலம் எத்தனை வகைப்படும்?
இ. நன்செய் நிலப் பயிர்கள் யாவை?
ஈ. புன்செய் நிலப் பயிர்கள் யாவை?
உ. உழவர் செய்யத்தக்க குடிசைத் தொழில்கள் எவை?

**2. எதிர்ப் பதங்கள் எழுது:**

பற்பல ×
நன்செய் ×
மிக்க ×
ஈரமுள்ள ×

**3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:**

வேளாளர் – நன்செய்–புன்செய்–ஊழியம் – மேலானவர்–குடிசைத் தொழில்–நெசவுத் தொழில்.



# 22. சூரியனும் பூமியும்

1. நாம் பூமியின் மேல் வசிக்கிறோம். நாம் பகலில் சூரியனைக் காண்கிறோம். சூரியன் நமக்கு வெப்பத்தையும், வெளிச்சத்தையும் அளிக்கிறது.

2. சூரியனும் சந்திரனும் நமக்கு வட்டமாகத் தோன்றுகின்றன. நட்சத்திரங்கள் மிகச் சிறியனவாகப் புலப்படுகின்றன. நாம் வசிக்கும் பூமி நமது பார்வைக்கு வட்டமாகத் தோன்றவில்லை. அது தட்டையாகவே தோன்றுகின்றது. ஆனால், பூமி சூரியனையும் சந்திரனையும் போல உருண்டை வடிவானதே.

3. தினந்தோறும் சூரியன் கிழக்கே உதிப்பது போலவும், மேற்கே மறைவது போலவும் தெரிகிறது. பூமி இருந்த இடத்திலேயே இருப்பதுபோலத் தோன்றுகிறது. உண்மை அதுவன்று. சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. இரயில் வண்டியில் போகும்போது ஜன்னல் வழியாகப் பார்த்தால் பக்கத்தில் உள்ள மரங்களும், மலைகளும் எவ்வாறு தோன்றுகின்றன ?

அவை விரைவாக எதிர் நோக்கி ஓடுவது போலத் தோன்றுகின்றன. ஆனால், அவை ஓடவில்லை ; ரயில் வண்டிதான் ஓடுகிறது. அது போலவே, பூமி மிகவும் வேகமாகத் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு, சூரி-யனையும் சுற்றுகிறது. சூரியன் ஒரே இடத்தில் இருக்கிறது.

4. பூமி வேகமாகத் தன்னைத்தானே சுற்று-வதால், சூரியன் எதிரில் இருக்கும் பக்கம் வெளிச்ச-மாகவும், மறுபக்கம் இருளாகவும் இருக்கும். மறுபக்-கம் சூரியன் எதிரில் வரும்போது, அங்கு வெளிச்சமாக இருக்கும். இவ்வாறு வெளிச்சம் இருந்த பக்கம் இரு-ளாகவும், இருள் இருந்த பக்கம் வெளிச்சமாகவும் மாறு-வதை நாம் இரவு, பகல் என்கிறோம். இவ்வாறு பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்வதற்கு ஒரு நாள் ஆகிறது. எனவே அதில் பாதி பகலாகவும் பாதி இரவாகவும் உள்ளன.

5. பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் ஆகின்றன. அதனை ஓர் ஆண்டு என்கிறோம். பூமி சூரியனைச் சுற்றுவது போலச் சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்குள், சந்திரன் பூமியைப் பன்-னிரண்டு முறை சுற்றிவிடுகிறது. அதாவது சந்-திரன் பூமியை ஒருமுறை சுற்றிவர முப்பது நாட்கள் ஆகின்றன. அதனால் ஓர் ஆண்டிற்குப் பன்னிரண்டு மாதங்கள் ஏற்படுகின்றன. பூமியைச் சந்திரன் சுற்றி வரும்பொழுது பதினைந்து நாட்கள் சந்திரன் மீது படும் சூரியனுடைய ஒளி கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி, வளர்ந்துகொண்டே வருகிறது. அதனை வளர்பிறை என்கிறோம். அதே போலப் பதினைந்து நாட்களில் சந்திரன்மீது படும் சூரிய ஒளி குறைந்துகொண்டே

வருகிறது. அதனைத் தேய்பிறை என்கிறோம். சூரிய ஒளி சந்திரன் மீது முழுவதும் பட்டுச் சந்திரன் முழு வட்டமாகத் தோன்றுவதைப் பௌர்ணமி என்கிறோம். சூரிய ஒளி சந்திரன்மீது படாமல் முழுவதும் மறையும் நாளை அமாவாசை என்கிறோம். சூரிய ஒளி சந்திரன் மீது படுவதற்கோ, படாமல் இருப்பதற்கோ காரணமாயிருப்பது பூமி.

6. சூரியன் பூமிக்கு வெகு தூரத்தில் உள்ளது. சந்திரன் பூமிக்குச் சமீபத்தில் உள்ளது, நாள், மாதம், வருடம் ஆகியவை பூமி சூரியனைச் சுற்றுவதாலும், பூமியைச் சந்திரன் சுற்றுவதாலும் ஏற்படுகின்றன.

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| வெப்பம் | வட்டம் | புலப்படுகின்றன | தினந்தோறும் |
| இருள் | ஆண்டு | அமாவாசை | பௌர்ணமி |

## பயிற்சி

1. விடை எழுது ;

அ. சூரியன் நமக்குத் தருபவை யாவை?

ஆ. பூமி சூரியனை எப்படிச் சுற்றுகிறது?

இ. பகலும் இரவும் எவ்வாறு உண்டாகின்றன?

ஈ. வருடம், மாதம் ஆகியவை எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?

2. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

வசிக்கிறோம் – அளிக்கிறது – தினந்தோறும் – உண்மை – வெளிச்சம் – இருள் – மறுபக்கம்.



## 23. மகாத்மா காந்தி

1. நாம் இன்று சுதந்தர மக்கள்; நமது நாடு சுதந்தர நாடு. சுதந்தரம் என்பது பிறர் ஆட்சியின் கீழ் இல்லாமை. பிறர் ஆட்சியின் கீழ் இருப்பது அடிமைத்தனம்.

2. சுமார் இருநூறு ஆண்டுகளாக நாம் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் இருந்தோம். அக்காலத்தில் நாம் நினைத்தபடி ஒன்றும் செய்ய இயலாதிருந்தது. இந்தியா சுதந்தரத்தை இழந்து அடிமை நாடாக இருந்தது. அந்த அடிமை நிலை ஒழிந்தது யாரால் தெரியுமா? இந்தியாவிற்குச் சுதந்தரத்தை வாங்கிக் கொடுத்தவர்

காந்தி அடிகள். காந்தி அடிகளின் பெருமை இந்தியா மட்டும் அல்ல, உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. ஒவ்வொரு நாடும் சுதந்தரம் அடையப் பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அடைந்திருக்கிறது; பல போர்கள் செய்திருக்கிறது. போர் என்பது சண்டை. சண்டையில் எத்தனை மக்கள் இறப்பார்கள்!

3. காந்தியடிகள் போர் இல்லாமலே நமக்குச் சுதந்தரத்தை வாங்கி அளித்தார். காந்தியடிகள் குஜரத்து நாட்டில் பிறந்தார். அவருடைய தகப்பனுர் சிற்றரசர் ஒருவரிடம் அமைச்சராய் இருந்தார். இளமைப் பருவம் முதற்கொண்டே காந்தியடிகளிடம் அரிய குணங்கள் பல விளங்கின. இவர் தாய்தந்தையரைப் போல உண்மையும், உறுதியும், தெய்வ பத்தியும் உடையவர். இவர் இளமையிலிருந்து பொய் பேசியதே இல்லை.

4. இவர் தம்மூரில் படிப்பை முடித்த பிறகு, இங்கிலாந்திற்குச் சென்ருர். அங்குச் சட்டக் கல்வி படித்துப் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றுத் திரும்பினுர். இளமை முதல் இவருக்குத் தாய்நாட்டினிடத்தில் அளவில்லாத பற்று உண்டு. இவர் ஆப்பிரிக்காவிற்குச் சென்ருர். அங்கு இந்தியர் ஆங்கிலேயரால் மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டனர். அதனைக் கண்ட காந்தியடிகள், ஆங்கில அரசாங்கத்தோடு போராடி, ஆப்பிரிக்காவில் வாழும் இந்திய மக்களுக்குப் பல நன்மைகளைத் தேடித் தந்தார்; பின்னர் அவர் இந்தியாவிற்கு வந்தார்.

5. அவர் இந்தியரின் அடிமை வாழ்க்கையைப் போக்க உறுதி கொண்டார். அவர் ஆங்கில அரசாங்கத்தோடு பல போராட்டங்கள் நடத்தினுர். காந்தி யடிகள் மக்கள் மனத்தில் தாய் நாட்டுப் பற்றை ஊட்-

டினர். காந்தியடிகள் தாம் பிறர்க்குச் சொன்ன எல்லாவற்றையும் தம் வாழ்க்கையில் நடத்திக் காட்டினர். அதனால் மக்களுக்கு அவரிடம் நம்பிக்கையும் அன்பும் அதிகமாயின. மக்கள் காந்தியடிகள் சொல்லைக் கேட்டு நடந்தனர்.

6. காந்தியடிகள் எளிய வாழ்க்கையை உடையவர். தினமும் அவர் நூல்நூற்பார். அவருக்குப் பிறரிடம் வெறுப்பு என்பதே இல்லை. மக்கள் யாவரும் சகோதரர்கள் என்று அவர் எண்ணினர். பிற நாட்டுப் பொருள்களை நாம் வாங்கலாகாது என்று அவர் போதித்தார். தாய்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களையே வாங்க வேண்டும் என்பது அவர் எண்ணம். ஒவ்வொருவரும் தாய்நாட்டினிடம் மிக்க அன்புடையவராக இருக்கவேண்டும் என்று அவர் கூறினர்.

7. காந்தியடிகள் நடத்திய அமைதியான போராட்டத்தினால் ஆங்கிலேயர் இந்தியாவை இந்தியர்களிடம் பூரண சுதந்தரத்துடன் ஒப்படைத்துவிட்டு நீங்கினர். 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் இந்தியா சுதந்தரம் பெற்றது. அவ்வாறு இந்தியா பூரண சுதந்தரம் பெறும்படி செய்தவர் மகாத்மா காந்தியடிகள். அவரிடம் இருந்த உயர்ந்த குணங்களைக் கண்டு உலக மக்கள் அவரை ' மகாத்மா ' என்று புகழ்ந்தார்கள். அவர் அவ்வப்போது கூறிய பொன்மொழிகளை நாம் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

### அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| *சுதந்தரம்* | *ஆட்சி* | *அடிமைத்தனம்* |
| *இழந்து* | *போர்* | *அளித்தார்* |
| *அமைச்சர்* | *இளமை* | *தெய்வபத்தி* |
| *உறுதி* | *சட்டக்கல்வி* | *பற்று* |
| *தாய்நாடு* | *உறுதி* | *போராட்டங்கள்* |
| *அமைதி* | *மகாத்மா* | *பொன்மொழி* |

## பயிற்சி

I. விடை எழுது:

1. நமது நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன், யார் ஆட்சியில் இருந்தது?

2. நாம் சுதந்தரம் அடையப் பாடு பட்டவர் யார்?

3. காந்தியடிகள் எங்கே பிறந்தார்?

4. அவருடைய சிறந்த குணங்கள் யாவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

இயலாது ×
இழந்தது ×
கஷ்டம் ×
பிறந்தார் ×
வந்தார் ×

3. எது எதற்குப் பொருந்தும்?

| | |
|---|---|
| நாம் முன்பு | இங்கிலாந்து சென்று படித்தார். |
| காந்தியடிகள் | காந்தியடிகள் போராடினர். |
| காந்தியடிகள் | குஜராத்தில் பிறந்தார். |
| ஆப்ரிக்க இந்தியருக்காக | ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தோம். |

# 24. நாட்டுப் பாட்டு

உலக மெலாம் போற்று புகழ்
ஒளிபெருகும் நாடு!
உமை கேள்வன் அளித்த தமிழ்
ஓங்கிவளர் நாடு! 1.

கன்னி முதல் இமயம் வரைக்
கண்ட தமிழ் நாடு!
காசினியோர் போற்றுகின்ற
கலைகள் வளர்நாடு! 2.

முடி மன்னர் மூவ ரவர்
மொய்ம்பு வளர் நாடு!
முச் சங்கம் நிறுவி தமிழ்
மொழி வளர்த்த நாடு! 3.

கம்பன் கும்பன் காளமேகம்
களித்த தமிழ் நாடு!
கணக்கில் பல நூல் பயின்ற
கன்னித் தமிழ் நாடு! 4.

வள்ளுவனைப் பெற்ற பெரு
மகிமை கொள்ளும் நாடு!
தெள்ளுதமிழ்ப் புலவரெலாம்
திகழ்ந்த பெரு நாடு! 5.

இத்திருநல் நாடுதனை
என்றும் போற்று வோமே
ஈசனருள் நிறைந்திடவே
என்று வாழ்த்துவோமே.! 6.

—'கௌணியன்'

## அரும்பதவுரை

1. உலகம்—உலகிலுள்ள மக்கள், ஒளி—கீர்த்தி, உமை கேள்வன்—பார்வதியின் கணவனுன பரமசிவன்.

2. கன்னி—கன்னியாகுமரி முனை, காசினியோர்—பூமியிலுள்ள மக்கள், கலைகள்—சாத்திரங்கள்.

3. முடி மன்னர் மூவர்—சேரர் சோழர் பாண்டியர், முச்சங்கம்—முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று தமிழ்ச் சங்கங்கள்.

4. கும்பன் — அகத்தியன் - காளமேகம் - ஒரு புலவர், களித்த — மகிழ்ந்த, அம்புவியோர் — அழகிய பூமியிலுள்ள மக்கள்.

5. வள்ளுவன் – திருவள்ளுவர், மகிமை – பெருமை, தெள்ளு–தெளிவு, திகழ்ந்த – விளங்கிய.

6. ஈசன்–கடவுள்.

புவர். அங்கு இயந்திரத்தின் உதவியால் அதிலிருந்து சாறு பிழிந்து, சர்க்கரை செய்யப்படுகிறது.

6. கரும்பு நமது நாட்டின் பல பாகங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. வட இந்தியாவில் மிகப் பெரிய சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தென் இந்தியாவிலும் சில இடங்களில் சர்க்கரை ஆலைகள் உண்டு. ஆலைகள் இல்லாத இடத்தில் விளையும் கரும்பை நாட்டு இயந்திரத்தில் கொடுத்துச் சாறு பிழிவார்கள். அதைக் காய்ச்சி வெல்லமும், நாட்டுச் சர்க்கரையும் செய்வார்கள்.

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| அணி | ஓங்கி | நன்செய் | புன்செய் |
| சுக்கான் தரை | கலப்பை | பறம்பு | நாற்றங்கால் |
| தாள் | வேல் | தேங்குவது | கணு |
| இயந்திரம் | ஆலைகள் | பதியும் | நாற்று |

## பயிற்சி

1 விடை எழுது:

அ. நன்செய் என்பது யாது?

ஆ. புன்செய் என்பது யாது?

இ. நெல் எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது?

ஈ. கரும்பு எப்படிப் பயிர் செய்யப்படுகிறது?

2. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

அணி – அழகு – முறை – களை – பிரி – கணு – கட்டு – சர்க்கரை ஆலை – சாறு – காய்ச்சி – வெல்லம்.



# 26. ஔவையார்

1. தமிழ் நாட்டில் ஔவையார் பெயரை அறி-யாதவர் இலர். சிறு குழந்தைக்கும் ஔவையார் பெயர் தெரியும். ஔவையார் பெண்பாற் புலவர். புலவர் என்ற சொல்லுக்கு 'நிறைந்த கல்வி உடைய வர்' என்பது பொருள். ஔவையார் அழகிய இனிய கவிகளை இயற்றியுள்ளார். அவர் எல்லாரிடத்திலும் மிகுந்த அன்புடன் பழகினார்.

2. முற்காலத்தில் தமிழ் நாட்டை முடி மன்னர் மூவர் ஆண்டு வந்தனர். அவர் சேரர், சோழர், பாண்-டியர் என்று கூறப்படுவர். அவர்களைத் தவிர, தமிழ் நாட்டில் சிற்றரசர் பலர் இருந்தனர். அவர் குறுநில மன்னர் எனப்படுவர். ஔவையாருக்கு முடிமன்னர்-மூவரும் மரியாதை செலுத்தினர். குறுநில மன்னர்-களும் ஔவையாரிடம் அன்பும், மதிப்பும் உடையவர்-களாய் இருந்தார்கள்.

3. ஔவையார் சிறந்த தமிழ் அறிவு படைத்தவர். அவர் தெய்வ பத்தி உடையவராயும், சாந்த குணம் உடையவராயும் விளங்கினுர். ஔவையாரைப் பற்றிப் பல கதைகள் உள்ளன.

4. சேலம் மாவட்டத்தில் தருமபுரி என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அதனை முற்காலத்தில் தகடூர் என்று அழைத்தனர். அவ்வூரில் **அதிகமான்** என்ற சிற்றரசர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த கொடையாளி. அவருக்கு ஔவையாரிடம் அளவில்லாத அன்பு உண்டு. ஒரு நாள் அவர் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருர். அங்கு அவருக்கு ஒரு கரு நெல்லிப் பழம் கிடைத்தது. அதனைத் தின்ருல் நீண்ட காலம் உயிர் வாழலாம் என்பது அதிகமானுக்குத் தெரியும்.

5. அதிகமான் அதனைத் தின்ன விரும்பவில்லை. அதனை அவர் ஔவையாருக்குக் கொடுத்தார். அதை ஔவையார் தின்ருர்; அதன் சிறப்பினை அதிகமான் கூறக் கேட்டார்; அதிகமான் தன்னிடம் வைத்திருந்த அன்பின் சிறப்பை உணர்ந்தார். அவரை மனமார வாழ்த்திஞர். ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்தார். அவர் தமிழ் நாட்டிற்குப் பல அரிய நூல்களை எழுதி உதவினுர். நீண்ட காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் பெண்கள் கல்வி கற்று மிக்க அறிவுடையவராய் விளங்கினர் என்பதற்கு ஔவையாரின் வரலாறு ஓர் உதாரணமாகும்.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| இயற்றியுள்ளார் | முடிமன்னர் | தெய்வ பத்தி |
| குறுநிலமன்னர் | சாந்த குணம் | சிற்றரசர் |
| கொடையாளி | புலவர் | இனிய |
| உணர்ந்தார் | அன்பு | கவி |

## பயிற்சி

1. விடை எழுது :

   1. ஔவையார் என்பவர் யார்?
   2. அதிகமான் என்பவர் யார்?
   3. அதிகமான் ஔவையாருக்குச் செய்த நன்மை யாது?
   4. ஔவையார் தமிழ் நாட்டுக்குச் செய்தது என்ன?

2. எதிர்ப் பதங்கள் எழுது :

   அறியாதவர் ×
   இலர் ×
   நிறைந்த ×
   பலர் ×

3. பொருத்தி எழுது :

| | |
|---|---|
| ஔவையார் | ஒரு கருநெல்லிக்கனி கிடைத்தது. |
| தகடூரை | கனியை ஔவையாருக்குக்கொடுத்தார். |
| அதிகமானுக்கு | பல நூல்கள் இயற்றினார். |
| அதிகமான் | அதிகமான் ஆண்டுவந்தார். |
| ஔவையார் | பெண்பாற் புலவர். |




## 27. காகமும் குடமும்

(கதைப்படம்)

**குறிப்புக்களைப் படித்துக் கதையைச் சொல் :**

1. காகத்தின் தாகம். 2. சாடியில் சிறிது நீர்.
3. சாடியில் கற்களைப் போடுகிறது. 4. நீர் குடிக்கிறது.

# 28. கடிதம் எழுதுதல்

1. நம்முடைய நண்பர்களும் சுற்றத்தாரும் நம் எதிரில் இருந்தால் நம் எண்ணங்களை அவர்களுக்கு நேரில் தெரிவிக்கிறோம். அவர்கள் வேறு ஊர்களில் இருந்தால் நாம் நம்முடைய எண்ணங்களை அவர்களுக்குக் கடிதத்தின் மூலமாகத் தெரிவிக்கின்றோம். நாம் கடிதம் எழுதும் பொழுது கவனிக்க வேண்டிய விதிகள் சில உள்ளன.

2. கடிதம் எழுதும்பொழுது, கடிதத்தின் இடப் புறத் தலைப்பில் நம் வீட்டு எண், தெருவின் பெயர், ஊரின் பெயர், தேதி என்பவற்றைக் குறிக்கவேண்டும். பிறகு கடிதத்தின் வலப்புறத்தில் யாருக்கு எழுதுகிறோமோ அவர்களுக்குப் பொருந்திய மரியாதை வாசகத்தை எழுத வேண்டும். பிறகு கடிதத்தைத் தொடங்கும் பொழுது, நம் நலத்தை எழுத வேண்டும். பிறகு அவர்கள் நலத்தை அறிய விரும்பும் நம் ஆவலைத் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு நாம் எழுத விரும்பும் செய்திகளைத் தெளிவாகவும், விளக்கமாகவும், சுருக்கமாகவும் எழுதவேண்டும். கடிதம் எழுதிய பின், மரியாதை வசனம் எழுதிக் கையெழுத்து இடவேண்டும். யாருக்கு எழுதுகிறோமோ அவர்களுடைய விலாசத்தையும் தெளிவாக எழுத வேண்டும். இதுவே கடிதம் எழுதும் முறை. மாதிரிக் கடிதம் ஒன்று அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அதைப் படிப்போம்.

## மாதிரிக் கடிதம்

*176, பெருமாள் கோவில் தெரு,*
*காஞ்சீபுரம்,*
*26—8—54.*

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

வணக்கம். இங்கு எல்லாரும் நலம். அங்குள்ளவர் நலத்தை அறிய விரும்புகிறேன். எனக்கு அடுத்த மாதம் இருபதாம் தேதி காலாண்டுப் பரீட்சை ஆரம்பமாகி, 24-9-54-ல் முடிகிறது. அது முடிந்ததும் நான் உங்களைக் காண வரலாம் என்று எண்ணி இருக்கிறேன்.

என்னை இந்தத் தடவை திருக்குற்ருலத்திற்கு அழைத்துச் சென்று காட்டவேண்டும். எங்கள் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் திருக்குற்ருலத்தைப் பற்றிப் படித்தேன். அது முதல் அதைக் காணவேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டுள்ளது. ஆதலால், விடுமுறை விட்டதும் நான் அங்கு வருகிறேன். என் வருகையைக் கந்தப்பனுக்குத் தெரிவிக்கவும். என் வணக்கத்தை மாமிக்குச் சொல்லவும்.

இப்படிக்கு,
வணக்கமும் அன்புமுள்ள,
**கா. சி. வேலன்.**

**விலாசம் :**

*திரு. தெ. பொ. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள், B. A.,*
*76, சின்னசாமிப் பிள்ளை தெரு,*
*திருநெல்வேலி.*

### பயிற்சி

**கீழே குறித்துள்ளபடி கடிதங்கள் எழுது :**

1. வெளியூரில் உள்ள உன் பாட்டனுருக்கு உனது பள்ளியைப் பற்றி விவரமாக ஒரு கடிதம்.

2. உன் நண்பன் ஒருவனுக்கு நீ பார்த்த ஓர் ஊரைப் பற்றி விவரமாக ஒரு கடிதம்.

# 29. மௌன வாசிப்பு—3

### கீழே உள்ள கதையை மனத்துக்குள் படித்து விஞக்களுக்கு விடை எழுது :

1. கிருஷ்ணதேவ ராயர் சிறந்த அரசர். அவர் நன்ருய்ப் படித்தவர். அவர் விஜயநகர இராச்சியத்தை ஆண்டுவந்தார். அவர் சபையில் ஒரு விகடன் இருந்தான். விகடன் என்பவன் வேடிக்கையாகப் பேசி யாவரையும் மகிழ வைப்பவன். அந்த விகடன் பெயர் **தெனுலிராமன்**.

2. ஒரு சமயம் கிருஷ்ணதேவ ராயரின் தாயார் கொடிய நோயால் வருந்திஞர். எத்தனேயோ வைத்தியம் செய்தும் பயனில்லாமல் போயிற்று. அந்த அம்மையார் இறக்கும் சமயத்தில் மாம்பழம் தின்ன ஆசைப் பட்டார். அக்காலம் மாம்பழம் கிடைக்கக்கூடிய காலம் அல்ல. ஆயினும் அரசர் மாம்பழம் வாங்கிவர ஆட்களேப் பல இடங்களுக்கு அனுப்பிஞர். மாம்பழம் வரக் கால தாமதம் ஆயிற்று. அதற்குள் அந்த அம்மையார் இறந்துவிட்டார். அரசர் தாயாரின் உயிரைத் திருப்திசெய்ய விரும்பிஞர். இறந்தவர்க்குப் பதிஞரும் நாள் வந்தது. அரசர் அன்று பிராமணர்களுக்கு அன்னம் அளித்தார்; தாயார் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய அப்பார்ப்பனர்க்குப் பொன்ஞல் செய்த மாம்பழங்களேயும் அளித்தார்.

3. சிலநாட் கழித்துத் தெனுலிராமன் தாயாருக்கு நோய் கண்டது. வைத்தியர்கள் மருந்து கொடுத்தும் நோய் குணப்படவில்லே. சூடு போட்டால் குணமாகலாம் என்று வைத்தியர் ஒருவர் கூறினர். அதன்படி இரும்புக் கம்பியை நெருப்பிலிட்டுக் காய்ச்-

சினர். ஆனால் அக்கம்பியை எடுத்து வந்து சூடு போடுவதற்கு முன், அந்த அம்மையார் இறந்துவிட்டார். அந்த அம்மையார் இறந்த பதினாறும் நாள், தெனாலிராமன் அந்தணர்களை அழைத்து அன்னமிட்டான்; பின் அந்தணர்களை ஓர் அறையில் அடைத்தான். இரும்புக் கம்பியை நெருப்பில் காய்ச்சி ஒவ்வொருவருக்கும் ஒரு சூடு வைத்தான். அவர்கள் 'குய்யோ-முறையோ' என்று கூவிக்கொண்டு அரசரிடம் சென்று முறையிட்டார்கள்.

4. கிருஷ்ணதேவ ராயர் தெனாலிராமனை வரவழைத்துக் கேட்டார். அதற்குத் தெனாலிராமன் சிறிதும் அஞ்சாமல், ''அரசே, தங்கள் தாயார் இறக்கும் பொழுது மாம்பழத்தை விரும்பிக் கேட்டதால், நீங்கள் பிராமணர்களுக்குத் தங்க மாம்பழம் கொடுத்தீர்கள். என் தாயாரின் நோய் நீங்கச் சூடு போடுவதற்கு முன் அவர் இறந்துவிட்டார். அவர் ஆத்மா திருப்தி அடைய நான் சூடு போட்டேன்,'' என்றான்.

அதுகேட்ட அரசர் சினப்பதா ? சிரிப்பதா ? அரசர் அந்தணர்களுக்கு வேண்டுவன கொடுத்து அவர்களைச் சமாதானப் படுத்தி அனுப்பினார்.

### வினாக்கள்

1. கிருஷ்ணதேவ ராயர் யார்?
2. அவர் சபையில் இருந்த விகடன் பெயர் என்ன?
3. அரசர் யாருக்குப் பொன் மாம்பழங்கள் கொடுத்தார்? ஏன் கொடுத்தார்?
4. தெனாலிராமன் யாருக்குச் சூடு வைத்தான்? ஏன் வைத்தான்?



## 30. தந்திரத்தால் தாகம் தீர்ந்தது

(கதைப் படம்)

படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக :—

1. தென்னை—நிறைந்த தோப்பு ஒன்று இருந்தது.
2. அத்தோப்பில் பல—வசித்தன.
3. தென்னை மரங்களில்— —இளநீர்க் காய்கள் காணப்பட்டன.
4. வழிப்போக்கன் ஒருவன் அத்— வந்தான்.
5. அவன்——மூட்டையும், கையில்——யும் இருந்தன.
6. வெயில் மிகவும்—இருந்தது.
7. வழிப்போக்கன் தாகத்தினுல்——.
8. அவன் —ப் பொறுக்கிக்—மீது விட்டெறிந்தான்.
9. குரங்குகள் பதிலுக்கு—ப் பறித்து எறிந்தன.
10. வழிப்போக்கன்—குடித்துக்—நீங்கினுன்.



# 31. கடலில் காணும் பொருள்கள்

(உரையாடல்)

**கந்தன் :**—சுந்தரம், இன்று கடற்கரைக்குப் போகலாமா ? இதுவரை நீ கடலைப் பார்த்ததில்லை அல்லவா ? கோயமுத்தூர் ஜில்லாவில் நீ எப்படிக் கடலைக்காண முடியும்?

**சுந்தரம் :**—கந்தா, இதோ வந்துவிட்டேன். இன்று எனக்குக் கடலைக் காட்டுகிறாயா ? நான் கடலைப் பற்றிப் புத்தகத்தில் படித்தேனே அல்லாமல் நேரில் பார்த்ததே இல்லை.

*(கந்தனும் சுந்தரமும் கடற்கரையில் நிற்கிறார்கள்.)*

**சுந்தரம் :**—எவ்வளவு பரந்தது! என்ன அழகு! 'ஜில்' என்று காற்று வீசுகிறது. 'ஓ' என்று கடல் இரைகிறது. அலைகள் ஒன்றன்மேல் ஒன்றாய் 'நான் முந்தி' 'நீ முந்தி' என்று போட்டியிடுவது போல மோதுகின்றன. அலையடிப்பதால் கடல் நீர் கரை

யில் ஏறி ஏறி இறங்குகிறது. அதோ பார், அலைகள் மோதும்பொழுது நுரைகள் வெண் பறவைகள் போலக் காணப்படுகின்றன. ஆகாயமும் நீரும் தொடுவன போல் காணும் அடிவானம் காண்பதற்கு வெகு அழகாய் இருக்கிறது. சூரியனது மஞ்சள் ஒளியில் கடல் நீர், 'தகதக' என மின்னுகிறது. அதோ செல்வது கப்பல்தானே ?

**கந்தன்**:—சுந்தரம், கடலைப்பற்றி வெகு அழகாகப் பேசினாய். அதோ பார், மேற்கே சூரியன் மறைந்தான்; கிழக்கே பூரண சந்திரன் பொன் தட்டைப் போலத் தோன்றுகிறான். இது எவ்வளவு இன்பம் தருகிறது. வா, மணலில் உட்கார்ந்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருப்போம்.

*(இருவரும் சென்று மணலின்மேல் உட்காருகிறார்கள்.)*

**சுந்தரம்** :—கந்தா, கடலால் ஏற்படும் பயன் என்ன ? கடலினுள் இருப்பன யாவை? இவற்றைப்பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்.

**கந்தன்** :—சுந்தரம்! சொல்கிறேன், கேள். நாம் வசிக்கும் உலகம் உருண்டை வடிவமானது. உலகத்தின் பரப்பில் இரண்டு பங்கு நீரும், கால் பங்கு பூமியும் உள்ளன. மிகப் பரந்ததாகவும், ஆழமாகவும் இருக்கும் நீர்ப் பரப்புக்குச் சமுத்திரம் என்பது பெயர். அதனைப் பெருங்கடல் எனவும் கூறுவர். பரப்பிற் சிறியதும், ஆழம் குறைந்ததுமான நீர்ப் பரப்புக் கடல் என்று கூறப்படும். கடல் நீர் உப்புக்கரிக்கும். அந்நீரிலிருந்து உப்பு விளைவிக்கிறார்கள். கடல் நீர் இல்லையானால் உலகில் மழை இராது. கடல் நீர் சூரியன் வெப்பத்தால் ஆவியாக மாறி, மேகமாகத் திரண்டு, மழையாகப் பொழிகிறது.

கடற்காற்று உடம்பிற்கு நல்லது. கடலிற் பல வகைப்பட்ட மீன்கள் வாழ்கின்றன. அவை நிறத்தாலும் வடிவாலும் வேறுபடுகின்றன. மீன்களுள் மிகச் சிறியவையும் மிகப் பெரியவையும் உண்டு. ஆழமான கடலிற் காணப்படும் திமிங்கிலம் என்பதும் மீன் இனத்தைச் சேர்ந்ததே. அது மிகப்பெரியது. அது ஒரு கப்பலையும் கவிழ்த்துவிடும். சுரு என்னும் ஒரு வகை மீன் ஓர் ஆளையே விழுங்கிவிடும்.

கடலில் வேறு பல உயிர்ப்பிராணிகள் உள்ளன. சோழி, சங்கு முதலியவற்றைப் பார்த்திருக்கிறாய் அல்லவா? அவை கடல் நீருள் வாழும் பிராணிகளின் மேல்லோடுகளே. சிப்பி, கிளிஞ்சல் என்பனவும் அத்தகையனவே. சிறியனவும் பெரியனவுமாக எத்தனை வகைச் சோழிகளும், சங்குகளும் உள்ளன! அவை கணக்கில் அடங்கா. முத்து உண்டாகும் சிப்பிகளையுடைய பூச்சிகள் கடலில்தான் வாழ்கின்றன. மக்கள் நீருள் மூழ்கித் தரைவரையிலும் சென்று அவற்றைத் திரட்டி எடுக்கிறார்கள். பவழமும் நீரில் வாழும் பிராணியின் உடலில் தோன்றுவதே. முத்தும், பவழமும் நவரத்தின வகையைச் சேர்ந்தன.

கடலுள் பெருமலைகளும் பாறைகளும் உண்டு. உலகின்மேல் பல அழகிய பொருள்கள் இருப்பது போலவே கடலுள்ளும் அளவற்ற அழகிய பொருள்கள் உள்ளன. சுந்தரம், நேரமாயிற்று; வா, வீட்டுக்குப் போகலாம்.

**அருஞ்பதங்கள்**

| | | |
|---|---|---|
| இரைகிறது | அலைகள் | மோதும் |
| கதிரவன் | இயற்கை | காட்சி |
| பயன் | விளக்கமாக | இளமை |
| சங்கு | சிப்பி | முத்து |

## பயிற்சி

1. விடை எழுது :

அ. கடற்கரையில் நின்றால் காண்பன எவை?

ஆ. கடற்கரையில் நிற்கும் போது சந்திரன் எழுவது எப்படித் தோன்றும்?

இ. கடலில் உள்ள மீன்களைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

ஈ. திமிங்கிலம், சுரு என்பவை பற்றி நீ அறிவது என்ன?

உ. கடலினுள் காணப்படுவன எவை?

ஊ. உலகில் நிலம் எத்தனை பங்கு? நீர் எத்தனை பங்கு?

எ. கடலுள் கிடைக்கும் இரண்டு நவரத்தினங்கள் யாவை?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :
கடற்கரை, சிற்றூர், எளிதான, சொற்பொழிவு-

8. எதிர்ப்பதங்கள் எழுது :

ஏறி ×
இன்பம் ×
கிழக்கு ×
இயற்கை ×
முந்தி ×

## 32. செய்யுட் பாடங்கள்

### 1. ஆத்திசூடி

1. ஞயம் பட உரை.
2. இணக்கம் அறிந்து இணங்கு.
3. நன்றி மறவேல்.
4. இலவம் பஞ்சில் துயில்.
5. வஞ்சகம் பேசேல்.
6. அழகு அலாதன செயேல்.
7. இளமையில் கல்.
8. அறனை மறவேல்.
9. அனந்தல் ஆடேல்.

அரும்பத உரை: ஞயம் - இனிமை, இணக்கம் - தகுதி உள்ளவர், இணங்கு - சேர், நன்றி - உபகாரம், இலவம் பஞ்சு - இலவம் பஞ்சால் ஆகிய மெத்தை, வஞ்சகம்-மனத்தில் ஒன்றும் சொல்லில் ஒன்றுமாக இருத்தல், அறன் - தருமம். அனந்தல் - தூக்கம்.

---

### 2. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
6. ஐயம் புகினும் செய்வன செய்.
7. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
8. கிட்டா தாயின் வெட்டன மற.
9. கீழோர் ஆயினும் தாழ உரை.

10. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
11. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
12. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
13. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
14. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
15. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
16. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
17. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
18. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
19. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.

*அரும்பத உரை: சாலவும் - மிகவும், ஈயார் - கொடாதவர், தேட்டை - செல்வம், வேருடன் - அடியோடு, எண் - கணிதம், எழுத்து - இலக்கண இலக்கியம், ஐயம் - பிச்சை, ஔவியம் - கோள் சொல்லுதல், பொறாமையால் கூறும் சொல். கிட்டாதாயின் - கிடைக்காததானால், தாழ - பணிவாக, கைப்பொருள் - செல்வம், மெய்ப்பொருள் - உண்மையான (அழியாத) பொருள், சீர் - பெருமை, தேம்பி - வருந்தி, திரை - அலை, திரவியம் - செல்வம், தேடாது - சம்பாதிக்காமல், பாடாய் - துன்பமாய், ஊண் - உணவு, நல்லிணக்கம் - நல்ல சிநேகம், அல்லல் - துன்பம், கேடு - அழிவு.*

---

## 3. வெற்றி வேற்கை

1. எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்.
5. உழவர்க்கு அழகு ஏர் உழுதூண் விரும்பல்.
6. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
7. அறிவோர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
8. வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை.

9. கற்கை நன்றே, கற்கை நன்றே,
பிச்சை புகினும் கற்கை நன்றே.

10. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.

11. எக்குடிப் பிறப்பினும், யாவரே ஆயினும்,
அக்குடியில் கற்ருேரை 'வருக' என்பர்.

12. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

13. குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்,
நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்.

14. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.

15. குன்று அத்தனை இருநிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

16. வித்தும் ஏரும் உளவாய் இருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

17. தன்ஆ யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கைக் கொடுக்கும் பேதையும் பதரே.

*அரும்பத உரை : எழுத்து - இலக்கண இலக்கியம், இறைவன் - கடவுள், செழுங்கிளை - நிறைந்த சுற்றம், ஈட்டல் - சம்பாதித்தல், வறுமை - தரித்திரம். செம்மை - ஒழுக்கம் தவருதிருத்தல், கற்கை - படித்தல், புகினும் - எடுத்தாலும், கல்லா - படியாத, குலநலம் - குலத்தின் பெருமை, பதர் - அரிசி இல்லாத நெல், குஞ்சரம்-யானை, ஊர்ந்தோர் - நடத்தியவர், நடைமெலிந்து - நடந்து செல்வதால் வருந்தி, நண்ணுவர் - அடைவர், அறக்கூழ்ச் சாலை - தருமத்திற்குக் கஞ்சி ஊற்றும் சத்திரம், இருநிதி - மிக்க செல்வம், எய்த்து - களைத்து, ஏழை - அறிவில்லாதவன், பேதை அறிவில்லாதவன்.*